# வயதுவந்தோர் கல்வியியல் கலைச் சொல் விளக்க அகராதி


பதிப்பாசிரியர்

**செ. சுப்பிரமணியன்**



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# வயதுவந்தோர் கல்வியியல் கலைச்சொல் விளக்க அகராதி

முனைவர் செ. சுப்பிரமணியன்
பேராசிரியர்
சமூக அறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-404-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 361

| | | |
|---|---|---|
| நூல் | : | வயதுவந்தோர் கல்வியியல் கலைச்சொல் விளக்க அகராதி |
| ஆசிரியர் | : | முனைவர் செ. சுப்பிரமணியன் |
| பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2041, ஆனி<br>முதற்பதிப்பு - சூன் 2010 |
| பக்கம் | : | 67 + 6 |
| அளவு | : | டெம்மி 1/8 |
| தாள் | : | 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ |
| படிகள் | : | 1200 |
| விலை | : | உரூ. 40.00 |
| ஒளியச்சு | : | முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,<br>தெற்கு வீதி, தஞ்சாவூர். |
| அச்சு | : | ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா<br>17 (7) ஸ்ரீபுரம் 2ஆவது தெரு<br>இராயப்பேட்டை<br>சென்னை 600 014 |

முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613010

நாள் 03-06-2010

## அணிந்துரை

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய நூலாசிரியர் முனைவர் செ.சுப்பிரமணியன்,பதிவாளர் முனைவர்சா.பி.சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

## முன்னுரை

தமிழ் உயர்கல்வி நிலையில் பயிற்சி மொழியாதல் வேண்டும். வல்லரசு நாடுகளில் (எ-டு. பிரான்ஸ், ரஷ்யா) கூட இன்றும் தாய்மொழியிலேயே கல்வி கற்கின்றனர். இந்நிலையில் அகராதிகள் அதிகம் தேவைப்படுகின்றன.

ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய கலைச்சொற்களைத் தொகுத்து அகராதிகளாக வெளியிடுவது அனைவருக்கும் பயனளிக்கும். சமூக அறிவியல் பாடங்களில் ஒன்றான வயது வந்தோர் கல்வி இயல் (Adult Education) பாடச் சொற்களைத் தொகுத்துத் தமிழ்ப் பல்கலைக்கழக மூன்று திங்கள் ஆய்வுத் திட்டத்தின்கீழ் இவ்வகராதி தயாரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபையின் ஒரு உறுப்பான யுனெஸ்கோ நிறுவனம் வெளியிட்டுள்ள Terminology of Adult Education என்ற ஆங்கில அகராதியில் இடம் பெற்றுள்ள 312 சொற்களும் மொழியாக்கம் செய்யப்பட்டுத் தக்க விளக்கங்களுடன் கூடியதாக இவ்வகராதி தொகுக்கப்பட்டுள்ளது.

இவ்வகராதியின் கலைச்சொல் பதிவமைப்பு மூன்று பகுதிகளைக் கொண்டது. முதற் பகுதியில் ஆங்கிலக் கலைச்சொல் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில் ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தரப்பட்டுள்ளது. மூன்றாம் பகுதியில் கலைச்சொல்லிற்கான விளக்கம் தமிழில் கொடுக்கப் பட்டுள்ளது.

இவ்வகராதித் திட்டத்தினை மேற்கொள்வதற்கும் இதனை நூலாக வெளியிடுவதற்கும் அனுமதியளித்த தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் **ம. இராசேந்திரன்** அவர்களுக் கும், பதிவாளர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வகராதியின் தட்டச்சுப் படிகளைச் சரிபார்த்தலில் உதவிய முனைவர்பட்ட ஆய்வாளர்கள் செல்வி அ. திருமகள் ராஜம், திரு இரா. பஞ்சநதம், திருமதி மு. மங்களாம்பிகை ஆகியோர்க்கும் எனது நன்றி.

இவ்வகராதியினை நூலாக அழகுற அச்சிட்டு வெளியிட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கு, குறிப்பாக அதன் இயக்குநர் திரு வை. கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கு எனது நன்றி உரியது.

செ. சுப்பிரமணியன்

# A

## ACCELERATED VOCATIONAL TRAINING
**துரிதத் தொழில் பயிற்சி**

தொழிலாளரைத் திறன்மிகு வேலை வாய்ப்புக்குத் தயார்ப் படுத்த, அவர்களுக்குப் பயிற்சி / மறுபயிற்சி அளிக்கும் முறை. பயிற்சி வழக்கமாக – கூடுமானவரை தொழிற்சாலைச் சூழலை ஒத்த சூழலில், வேலையை விட்டு வெளியே நடைபெறுகிறது. பொருந்திய செயல்பாட்டுத் தரத்தை அடையத் தேவையான குறைந்த அளவு நேரமே பயிற்சிக்கு எடுக்கும் விதத்தில் ஆன நடைமுறை மற்றும் தீவிர போதனை முறைகள் பயன் படுத்தப்படுகின்றன.

## ADULT BASIC EDUCATION
**வயதுவந்தோர் அடிப்படைக் கல்வி**

சமூகத்தில் பொறுப்பாகப் பங்கேற்கத் தேவையான எழுத்தறிவு, எண்ணறிவு, சமூக மற்றும் வாழ்திறன்கள், சமுதாய வாழ்க்கையைப் புரிதல் போன்றவற்றில் வயது வந்தோர் பெறும் அடிப்படைக் கல்வி.

## ADULT COURSE
**வயதுவந்தோர் படிப்பு**

வயது வந்தோருக்கு ஏற்பாடு செய்யப்படும் வழி காட்டுதலின்கீழ் ஒழுங்காக, முறையாகக் கற்றுக் கொள் ளும் அனுபவப் பாடம்.

## ADULT DEGREE
**வயதுவந்தோர் பட்டம்**

முதிர்ந்த மாணவர்களுக் கான, சிறப்பாக வடிவமைக்கப் பட்ட பாட உள்ளடக்கம், கால அட்டவணையாக்கம் மற்றும் கற்பித்தல் முறைகளைக் கொண்ட பட்டத்தைக் குறிக்க ஐக்கிய அமெரிக்காவில் பயன் படுத்தப்படும் சொல். இது

அஞ்சல்வழிப் பாடங்களைப் பல்கலைப் பாடங்களுடன் இணைக்கிறது. படிக்கும் பாடம் தொடர்பான வாழ்க்கை அனுபவங்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

## ADULT DEVELOPMENT
**வயதுவந்தோர் வளர்ச்சி**

வயதுவந்த நிலையின் பல்வேறு கட்டங்கள் வழியாக வரிசையாக நடைபெறும் தொடர்ந்த மாறுதல் மற்றும் வளர்ச்சி. இயல்பான வளர்ச்சி என்பது நிலைப்புக் கட்டங்களையும் மாறுதல் கட்டங்களையும் கொண்டுள்ளது. இவற்றில் வாழ்க்கைச் சுழற்சி வழியாக அனுபவக் கல்வி உள்வாங்கிக் கொள்ளப்படுதலால் பல்வேறு நிகழ்ச்சிகள் பெரும் நெருக்கடிகளாக உணரப்படுவதில்லை.

## ADULT EDUCATION
**வயதுவந்தோர் கல்வி**

1. குழந்தைப் பருவத்தில் தொடங்கிய ஆரம்பக் கல்வியின் தொடர் வட்டத்தை நிறைவு செய்திருப்போரின் நன்மைக்கும் தேவைகளுக்கும் ஏற்ற கல்வியைக் கொண்டு வரத் திட்டமிட்ட எந்த ஒரு முறையான தொடர்ச்சியான பரவலையும் குறிக்கிறது. உழைப்புச் சந்தைக்குள் புகுமுன் மேற்கொள்ளப்படும் உயர் கல்வியும் பள்ளியைத் தாண்டிய கல்வியும் பொதுவாக வயதுவந்தோர் கல்வி எனக் கருதப்படுவதில்லை.

2. வயது வந்தோர் கல்வித் துறை மீதான யுனெஸ்கோ பரிந்துரையில் இச்சொல், ஒழுங்கமைந்த கல்வி முறைமைகள் முழுவதையும் குறிக்கிறது. இதில் எல்லா முறை, உள்ளடக்கம், முறை சார்ந்தது – சாராதது, பள்ளிகள் –கல்லூரிகள் – பல்கலைகளிலும் தொழிற்பயிற்சியிலும் தொடக்கக் கல்வியை அவர்கள் நீட்டித்தது – பதிலீடு செய்தது அனைத்தும் அடங்குகிறது. இதன்மூலம் தாம் வாழும் சமுதாயத்தால் வயதுவந்தோராக மதிக்கப்படுவோர் தம் திறமைகளை வளர்த்துக் கொள்கிறார்கள், தம் அறிவை வளப்படுத்திக் கொள்கிறார்கள். தம் தொழில்நுட்ப அல்லது அலுவல்சார் தகுதிகளை மேம்படுத்திக் கொள்கிறார்

கள், அல்லது அவற்றை ஒரு புதிய திசையில் மாற்றுகிறார்கள். மேலும் முழுமையான சொந்த வளர்ச்சி, மற்றும் சமநிலையான சுதந்திரமான சமூக – பொருளியல் – பண்பாட்டு வளர்ச்சியில் பங்கேற்பு என்னும் இருவிதப் பார்வையில் தம் மனப்பான்மைகளில் அல்லது நடத்தையில் மாற்றங்களைக் கொணர்கிறார்கள்.

3. ஐக்கிய இங்கிலாந்தில் (யுகே) மரபாக, தொழிற்கல்வி சாரா வயதுவந்தோர் கல்வியை மட்டும் குறிக்கிறது.

## ADULT EDUCATION CENTRE

### வயதுவந்தோர் கல்வி மையம்

வயதுவந்தோர் கல்விக்காக உருவாக்கப்பட்ட நடவடிக்கைகள் நடைபெறும் நிறுவனம். இது தனிப்பட்ட இந்த நோக்கத்துக்காகவே பயன்படுத்தப்படலாம், அல்லது வேறு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படலாம். காட்டாக, தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகள் அடிக்கடி வயதுவந்தோர் கல்வி மையங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**வேறு பெயர்கள்**

Adult Centre
Adult School
Continuing Education Centre

## ADULT EDUCATION COUNCIL

### வயதுவந்தோர் கல்விக்குழு

வயதுவந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள அரசு அல்லது தனியார் அமைப்புகள் மற்றும் முகமைகளின் பேராளர் பேரவை. இது தேச, வட்டார அல்லது உள்ளூர் அளவில் செயற்படலாம். வயதுவந்தோர் கல்விக் கொள்கையைத் தீர்மானிப்பதில் அதற்கு நிறைவேற்று அதிகாரம் இருக்கலாம் அல்லது கருத்து தெரிவிக்கும் பங்கு மட்டுமே இருக்கலாம். வழக்கமாக அதற்கு ஒரு ஒருங்கிணைக்கும் செயற்பாடு இருக்கிறது; அதன் உறுப்பினர்களுக்கு, பொதுவான அக்கறைக்குரிய செய்திகள் மீதான விவாதத்துக்கு ஒரு

அரங்கினை அது வழங்கு கிறது.

**வேறுபெயர்**

Continuing Education Council

## ADULT EDUCATION WORKER
**வயதுவந்தோர் கல்வி ஊழியர்**

வயதுவந்தோர் கல்வியில் ஈடுபட்டுள்ள அமைப்பாளர், நிருவாகர் அல்லது ஆசிரியர்.

**வேறு பெயர்கள்**

Adult Educationist
Adult Educator
Tutor - Organiser

## ADULT EDUCATIONIST
**வயதுவந்தோர் கல்வியாளர்**

காண்க: Adult educator

## ADULT EDUCATOR
**வயதுவந்தோர் கல்வியாளர்**

1. வயதுவந்தோர் கல்வி கற்பிப்பவர் அல்லது அமைப் பாளர்.

2. வயது வந்தோர் கல்வி குறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ள வர்.

**வேறு பெயர்**

Adult Educationist

## ADULT ELEMENTARY EDUCATION
**வயதுவந்தோர் தொடக்கக் கல்வி**

காண்க: Adult basic education

## ADULT LEARNER
**வயதுவந்த கற்போர்**

காண்க: Adult student

## ADULT LEARNING
**வயதுவந்தோர் படிப்பில் பயிலல்**

1. முதிர்ந்த நுண்ணறிவு, உடல் தகுதி மற்றும் சமூக வளர்ச்சி அடையப் பெற்றவர் கள், புதிய அறிவு மற்றும் திறன்களை அடைந்து கொள் வதும் புதிய பான்மைகளை வளர்த்துக் கொள்ளுதலும் ஆகும்.

2. வயதுவந்தோர் புதிய அறிவையும் திறன்களையும் அடைந்து கொள்ளும் புதிய

பான்மைகளையும் இந்த நிகழ்முறைகளின் மேல் செல்வாக்கு செலுத்தும் நுண்ணறிவு, உடலியல், சமூகக் காரணிகளையும் வளர்த்துக் கொள்ளும் நிகழ்முறை. இந்தக் காரணிகள் குழந்தைகள் கற்றுக்கொள்வதைப் பாதிக்கும் காரணிகளில் இருந்து வேறுபடுவது குறிப்பிடத்தக்கது.

## ADULT SCHOOL

**வயதுவந்தோர் பள்ளி**

1. உயர்கல்வி நிலைக்குக் கீழான வயதுவந்தோர் கல்விக்கான நிறுவன அமைப்பு.

**வேறு பெயர்**

Adult Centre
Adult Education Centre

2. ஆசிரியர் இல்லாமல் படிப்பு வட்டங்களாகவோ, விவாதக் குழுக்களாகவோ கூடும் ஐக்கிய இங்கிலாந்திலுள்ள தனியார் அமைப்பின் பெயர். வயதுவந்தோர் பள்ளியின் நோக்கம், புரிதலை ஆழப்படுத்துதல், நட்பு – ஆய்வு – சமூகசேவை – மத, ஒழுக்க மதிப்பீடுகளில் கரிசனம் மூலம் வாழ்வை வளப்படுத்துதல் ஆகியவையாகும்.

## ADULT STUDENT

**வயதுவந்த மாணவர்**

தொடர் கல்வியின் தொடக்கச் சுற்றை நிறைவு செய்து, முறையான கல்வியை மேற்கொள்பவர். முழுநேர மாணவராயின், கல்விக்குத் திரும்பும் முன் குறிப்பிட்ட காலம் பொதுவாக முழுநேர வேலையில் இருந்திருப்பார். பகுதிநேரர் ஆயின் தன் படிப்புக் காலத்தின்போதே வேலைக்குப் போகிறவராகவும் இருப்பார்.

**வேறு பெயர்**

Adult Learner

## ADULT TEACHER

**வயதுவந்தோர் ஆசிரியர்**

தனிப்பட்ட குழுவாக உள்ள மற்றும் அமைப்புகளிலும் நிறுவனங்களிலும் உள்ள வயது வந்தோருக்குக் கல்வி வழங்குபவர்.

**வேறு பெயர்**

Trainer

## ADULT TEACHING

**வயதுவந்தோர் கற்பிப்பு**

தனிப்பட்ட, குழுக்களாக உள்ள மற்றும் நிறுவனங்களில் உள்ள வயதுவந்தோருக்கு ஆசிரியர்களும் தலைவர்களும் பயிற்றுநர்களும் பயிற்சியாளர்களும் பிறரும் கற்பிக்கும் நிகழ்முறை.

## ADULT TRAINEE

**வயதுவந்த பயிற்சியர்**

குழந்தைப் பருவத்தில் தொடங்கப்படும் தொடக்கக் கல்வியை முடித்தவுடனும் வேலையில் புகுமுன்னும் மேற்கொள்ளப்படும் பயிற்சி அல்லாத தொழிற்பயிற்சி பெறுபவர்.

## ADULT TUTOR

**வயதுவந்தோர் பயிற்றுநர்**

வயது வந்தோருக்கான ஆசிரியர் – குறிப்பாகப் பரந்துபட்ட வயதுவந்தோர் கல்வியிலும் எழுத்தறிவுக் கற்பிப்பிலும் ஈடுபடுபவர். இங்கு கற்பிப்பு சிறு சிறு குழுக்களுக்காக நடத்தப்படுகிறது.

**வேறு பெயர்**

Adult Teacher / Trainer

## ADULT VOCATIONAL TRAINING

**வயதுவந்தோர் தொழிற்பயிற்சி**

தான் வேலை செய்யும் காலம் முழுவதும் வயது வந்தவர் ஒரு வேலையை, தொழிலை அல்லது பணியை நிறைவேற்றத் தேவையான பான்மைகளை, அறிவை அல்லது திறன்களை வளர்க்கவோ அல்லது புதிய திறன்களை அடையவோ தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்வதைக் குறிக்கும் பிரெஞ்சுத் தொடர்.

## ADULTHOOD

**வயதுவந்த நிலை**

1. விடலைப் பருவத்தை அடுத்து மீத வாழ்நாள் முழுதும் நீடிக்கும் வாழ்க்கைக் கட்டம்.

2. விடலைப் பருவத்தைத் தொடரும் உடல் – மன – சமூக முதிர்ச்சி நிலை.

## AGEING

**முதிர்ச்சி**

உடல், மன, சமூக மாறுதல்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான மாறுதல் போக்கு. இதற்கு ஒருவர் வயது கூடுவதன் விளைவாக வாழ்க்கை நெடுக உட்படுகிறார். வயதுவந்தோர் கல்வியில் இது குறிப்பாக, உயர்ந்த அளவு உடல் – மன வளர்ச்சி அடைவதைத் தொடரும் காலகட்டத்தைக் குறிக்கப் பயன்படுகிறது.

## AGRICULTURAL EXTENSION

**உழவியல் விரிவாக்கம்**

உழவுச் சமூகத்தில் உறவு நடைமுறைகளை மேம்படுத்த உழவியல் கல்வி நிறுவனங்கள் நடத்தும் கல்வியும் வழிகாட்டுதலும்.

## ANDRAGOGY

**வயதுவந்தோர் கல்வியியல்**

வயதுவந்தோர் பயில உதவும் கலை மற்றும் அறிவியல்.

வயதுவந்தோர் கல்விக் கொள்கை, நிகழ்முறைகள், நுட்பம் பற்றிய ஆய்வு, படிப்பு.

## ANIMATEUR

**தூண்டலாளர்**

கல்வித்துறையில் சமுதாய வளர்ச்சிக்கான சமூகப் பணியில் உள்ளவரைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல். ஒரு குழு என்ற முறையில் மக்கள் தம் சொந்தத் தேவைகள் பற்றிய விழிப்பு பெறுவதைத் தூண்டிவிட உழைப்பவர். இதன்மூலம் அவர்கள் தம் தேவைகளின் தன்மையை வரையறுக்கவும் அவற்றை நிறைவு செய்யும் வழிகளைத் தீர்மானிக்கவும் அவ்வாறே நடக்கவும் முடியும்.

## ANIMATION

**தூண்டல் பணி**

பிரெஞ்சு மூலத்திலிருந்து வந்த கருத்தாக்கம். கல்வி – சமூகப்பணி – சமுதாய மேம்பாட்டுத் துறைகளில் பயன்படுத்தும் விதத்தில் இது, மக்கள் ஒரு குழு என்னும் முறையில் தம் சொந்த நலன்கள் பற்றிய விழிப்பைப் பெறத் தூண்டுதல் ஆகும். இதன்வழி அவர்கள் தம் தேவைகளின் இயல்பைச் செய்யும் வழிவகைகளை தீர்மானிக்கிறார்கள். அவ்வாறே செய்யவும் செய்கிறார்கள். ஆகவே இது

ஒரு அமைப்போ போதனையோ ஆவதில்லை; மாறாகத் தொடங்கிவிடுதல், வினையூக்கல், மற்றும் யோசனை கூறலே ஆகும். இந்த வரையறை நடப்பு நடைமுறையின் விளக்கம் என்பதை விடவும் அடைய வேண்டிய ஒரு இலக்காகவே அமைகிறது. தற்போது இச்சொல் போகும் திசை, அமைப்பு, வழிகாட்டல் ஆகியவற்றின் பெருமளவான கூறடங்கிய செயற்பாடுகளில் பயன்படுகிறது.

## APPRENTICESHIP

**தொழில்பழகு காலம் நிலை**

1. ஒரு உறவுமுறை நிறுவப்படும் பயிற்சி முறை. இதில் உடனடி நேர்முகக் கண்காணிப்பின்கீழ் பழகுநர் கற்பதில் நேரடிப் பங்கேற்பு மூலம் அறிவும் திறன்களும் அடையப் பெறுகிறார். அதற்கான சூழ்நிலை அந்த அறிவும் திறன்களும் பயன்படும் சூழ்நிலைகளுடன் ஏறக்குறைய ஒத்துள்ளது.

2. முழுத்திறன்/ஓரளவு திறன் தேவைப்படும் ஒரு தொழிலை ஒருவர் கற்றுக் கொள்ளும் நடைமுறை. இதற்கு இரண்டு அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் வேலையில் கண்காணிப்பின்கீழான பணி அனுபவம் தேவைப்படுகிறது. இத்துடன் தொடர்புடைய வகுப்பறைப் போதனையும் தேவைப்படுகிறது.

## ARMED FORCES EDUCATION

**ஆயுதப் படையினர் கல்வி**

குறிப்பான படையியல் பயிற்சி அல்லாத ஆயுதப் படைகளில் பணிபுரிவோருக்கு வழங்கப்படும் கல்வி.

**வேறு பெயர்கள்**

Forces Education
Services Education

## ARTS CENTRE

**கலை மையம்**

வெகுசன நாடக, திரைப்பட, இசை நிகழ்ச்சிகளுக்கும் கலைக் கண்காட்சிகளுக்கும்

இடமளிப்பதும் அவற்றுக் காகவே உள்ளதுமான நிறுவனம். இதில் பயிற்சி, உருவாக்கம் மற்றும் பட்டறை வசதிகளும் இருக்கலாம்.

### ASSOCIATION POLYVALENTE

**பலகலை மன்றம்**

நாடகக்குழு, இசைச் சங்கம், திரைப்படக் கழகம் போல் ஒரு சிறப்புத் துறையில் மட்டும் என இல்லாமல் பல துறை சமூகப் பண்பாட்டு நட வடிக்கைகளை வழங்கும் தனியார் அமைப்பு. பிரெஞ்சுச் சொல்.

### AUTONOMOUS GROUP

**தானே கற்கும் குழு**

குழுவுக்கு வெளியில் உள்ள எந்த முகமையாலும், நிறுவனத்தாலும் மனிதராலும் தூண்டப்படாமல் நிருவகிக்கப் படாமல் அல்லது ஆதரிக்கப் படாமல் செயல்படும் பயில் குழு. இந்தக் குழு ஆய்வில், சமூகச் செயல்பாட்டில் அல் லது சமுதாயக் கல்வியில் ஈடு பட்டிருக்கலாம்.

## B

### BASIC EDUCATION

**ஆதாரக் கல்வி**

சமூகத்தில் வாழ்வுக்குத் தேவையான அடிப்படை அறி வும் திறன்களும் பெறுவதைக் குறியாகக் கொண்ட கல்வி.

### BASIC TRAINING

**ஆதாரப் பயிற்சி**

ஒரு வேலை/பணிக்கான தொடக்கநிலைப் பயிற்சி. தேவையான தரத்தை எட்டு வதற்கான அடிப்படை, பான்மை, அறிவு அல்லது திறனை அளிப்பதை இலக் காகக் கொண்டது.

### BLOCK RELEASE

**மொத்த விடுப்பு**

ஒரு தொடர்ச்சியான காலத் துக்கு ஒரு பணியாளரை வேலையிலிருந்து விடுவித்து விடுதல். இது சில நாள்களி லிருந்து பல மாதங்கள் வரை எப்படி வேண்டுமானலும் இருக்கலாம். வழக்கமாக ஊதிய இழப்பு இல்லாமல், ஒரு படிப்பு / பயிற்சியை

முடிக்க இது அவரை அனுமதிக்கிறது.

**BRAIN STORMING**

**மூளையைக் கசக்கல்**

கட்டமைக்கப்படாத விவாதம் மூலம் குழுச் சிக்கல் தீர்த்தலில் படைப்புத் தன்மையை அதிகரிக்க உருவாக்கப்படும் உத்தி. திறனாய்வுச் சோதனைக்குட்படாமல் பங்கேற்போர் பொருத்தமான கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். திறனாய்வு பின்னர் வருகிறது. இம்முறையில் தெரிவு செய்ய அதிக அளவு தீர்வுகள் கிடைக்கின்றன.

**BUSINESS EDUCATION**

**வணிகத் தொழிற்கல்வி**

ஒருவரை வணிக / தொழில் நிருவாகப் பணிக்காக உருவாக்கத் தயாரிக்கப்பட்டுள்ள கல்வி.

**BUZZ GROUP**

**அரட்டைக் குழு**

அரட்டை முறையைக் கையாள ஒரு பயில்குழுவைப் பிரித்து அமைத்த அலகு.

காண்க: Buzz method

**BUZZ METHOD**

**அரட்டை முறை**

ஒப்பளவில் குறுகிய காலத்துக்கு ஒரு பயில்குழுவை மேலும் சிறிய அலகுகளாகப் பிரித்து, குழு பயிலும் தலைப்புக்கு பொருத்தமான குறிப்பான பணியை எடுத்துக் கொள்ளுதல்.

---

# C

---

**CAREER EDUCATION**

**தொழிற்கல்வி**

தனியாளின் வேலை மற்றும் வாழ்க்கை முன்னேற்றத்தை ஊக்குவிக்குமாறு வடிவமைத்த கல்வி. குறிப்பான தொழில் அறிவு மற்றும் திறன்களோடு இது அடங்குவதில்லை; பலவிதமான படிப்புகளும் இதற்குள் இருக்கலாம்.

**CASE METHOD**

**ஆள் ஆய்வு முறை**

காண்க: Case study method

## CASE STUDY METHOD

**தனி அலகு முறை**

கோட்பாடுகள், கருத்தாக்கங்கள் மற்றும் நிஜவாழ்வின் நிகழ்வுகளைப் பகுத்தாயும் – கலந்துரையாடும் நடைமுறைக்குத் துணையான ஒரு நிகழ்ச்சி – அல்லது நிலைமை குறித்த எழுத்து மூல விவரிப்பைப் பயில்வோர் பயன்படுத்தல்.

## CATCHMENT AREA

**ஆள் எடுப்புப் பகுதி**

வயதுவந்தோர் கல்வி அமைப்பு ஒன்று தன் பயனாளர்களைப் பெறும் குடியிருப்புப் பகுதி.

## CENTRE SOCIAL

**சமூக மையம்**

அடிப்படையில் சமூக, நல சேவைகள் வழங்கும் நிறுவனத்தைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல். வாய்ப்பு வசதிகள் கிடைத்தால் விளையாட்டு, நிகழ்த்து கலைகள், கைவினைகள், காட்சிக் கலைகள், தொடர்கல்வி ஆகிய துறைசார் நடவடிக்கைகளும் வழங்கப்படுகின்றன.

## CHANGE AGENT

**மாறுதல் காரணி**

மாறுதலைக் கொணர முயலும் ஆள் அல்லது குழு; மாறுதலுக்கு முயல்வோரிடம் அதை வழங்கும் ஆள் / குழு; அல்லது மாறுதலோடும் முரண்பாட்டோடும் தகவமையப் பிறருக்கு உதவும் ஆள்/குழு.

## CITIZENSHIP EDUCATION

**குடி உரிமைக் கல்வி**

மனிதர்கள் குடிகள் என்னும் முறையில் தம் உரிமைகளையும் கடமைகளையும் உணரச் செய்வதற்கான கல்வி. அவற்றைத் திறம்படவும் பொறுப்புடனும் கையாளவும் அவ்வாறு நடப்பது தம் கடமை என உணரவும் செய்யக்கூடிய கல்வி.

**வேறு பெயர்கள்**

Civic Education
Public Affairs Education

## CIVIC EDUCATION

**குடிமைக் கல்வி**

காண்க: Citizenship Education

**CLIENTELE ANALYSIS**

**வருகையர் ஆய்வு**

ஒரு திட்டத்தில் நடப்பில் பயில்வோரை அல்லது பயில வாய்ப்புள்ளோரைப் பற்றிய முதன்மையான விவரங் களைப் பெறுவதற்காகத் திட்ட மிட்டு நடத்தப்படும் ஆய்வு. இதில் கல்வித் தேவைகள், சமூகப் பொருளியல் பின் னணி, புவியியல் இட அமைவு, ஓய்வு மற்றும் படிப்பு முன் னுரிமைகள் போன்ற கூறுகள் அடங்குவன.

**CLINIC**

**ஆய்வகம்**

நிலைமைகள் அல்லது சிக்கல்களின் இயல்பறிதல் – பகுப்பு ஆய்வு – சீர்செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய வரிசையான – விரிவான கூட்டங்கள் / சந்திப்புகள்.

**COMMERCIAL EDUCATION**

**வணிகக் கல்வி**

அலுவலக வேலை வாய்ப் புக்கான கல்வி. இதில் செயல் முறை (செக்ரட்டேரியட்)த் திறன்களுக்கும் கணக்கு வைப்புத் திறன்களுக்கும் பெரிதும் முக்கியத்துவம் தரப்படுகிறது.

**COMMUNITY ASSOCIATION**

**சமுதாயச் சங்கம்**

ஒரு சமுதாயம் என்று அழைக்கப்படப் போதுமான பொதுவான நலன்களையும் பொதுவான குழு அடையாள உணர்வையும் பெற்றுள்ளவர் களாகச் சொல்லப்படலாம் என் னும் ஒரு குறிப்பிட்ட நிலவியல் பகுதிவாழ் குடிகளின் தனிப் பட்ட சங்கம். இந்த ஒத்த உணர்வை வளர்ப்பதும் சமு தாயத்தின் சமூக, பண்பாட்டு, பொருளாதார வாழ்வை மேம் படுத்துவதுமே இத்தகைய சங்கத்தின் நோக்கம்.

**COMMUNITY CENTRE**

**சமுதாய மையம்**

ஒரு சமுதாயத்தின் சமூக – பண்பாட்டு வாழ்வின் மைய மாக இயங்கும் நிறுவனம். (ஊர்: அண்டைப்பகுதி) இது பொதுக்கூட்டங்களுக்கும் சங் கக் கூட்டங்களுக்கும் இட மளிக்கிறது. சமூக, பொழுது போக்கு மற்றும் கல்வி நட வடிக்கைகளுக்கு வசதிகள்

வழங்குகிறது. வழக்கமாக, பயன்படுத்துவோரின் ஒரு குழுவால் நிருவகிக்கப்படுகிறது. அது பயன்படுத்துவோரின் ஒரு சங்கத்தால் தனியாக உடைமை கொள்ளப்பட்டதாகவும் இருக்கலாம்; அல்லது வட்டார அதிகாரத்தால் பொதுவாக உடைமை கொள்ளப்பட்டதாகவும் இருக்கலாம்.

## COMMUNITY COLLEGE
### சமுதாயக் கல்லூரி

1. பல்நோக்கு நிறுவனத்தைக் குறிக்கும் ஐக்கிய இங்கிலாந்துச் சொல். இது ஒரு இடைநிலைப் பள்ளியாகவும் தொடர்கல்வி மையமாகவும் புழங்கப்படுகிறது. வயது வந்தோருக்கும் விடலைப்பருவத்தினருக்கும் ஆன சமூக – பண்பாட்டு நடவடிக்கைகளுக்கான வசதிகள் கொண்டது. இதன் நோக்கம், சமுதாய நடவடிக்கைகளுக்கு ஒரு மையம் ஏற்படுத்துவதும் கல்லூரியின் ஆள்சேர் வரம்புக்குள் வாழ்வோரின் ஒருங்கிணைந்த சமுதாய வாழ்வை ஊக்குவிப்பதும் ஆகும்.

**வேறுபெயர்**

ஊர்க் கல்லூரி

2. இடைநிலை கடந்த கல்வி நிறுவனத்தைக் குறிக்கும் வட அமெரிக்கச் சொல். குறிப்பிட்ட சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்ய நிறுவப்படுகிறது. பருவ அல்லது தொடக்க நிலையிலான 2 ஆண்டுப் பயிற்சித் திட்டங்களை வழங்குகிறது. இவை தொழில் முறை, தொழில்நுட்ப அல்லது பரந்துபட்ட கலைத் துறைகள் தொடர்புடையன. பெரும்பாலானவை அரசால் நிதி வழங்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இருபால் நிலையங்களாக உள்ளன. பொதுவான ஆர்வத்துக்குரிய விருதுக்குரியதல்லாத நிகழ்ச்சிகளையும் வழங்குகின்றன.

## COMMUNITY DEVELOPMENT
### சமுதாய வளர்ச்சி

1. குறிப்பிட்ட நகர/கிராம பகுதிவாழ் மக்களின் பொருளாதார – சமூக நல முன்னேற்றத்தை நோக்கிய நடவடிக்கைகள். ஒரு குழு

உணர்வும் பொதுநலன்கள் கொண்ட அமைப்பும் இவற்றுக்குப் பொதுவாக உள்ளது. கொள்கை அளவில் பகுதி மக்கள் முடிவு எடுப்பதிலும் நடவடிக்கைகளில் பங்கேற்பதிலும் முதன்மைப் பங்கு வகிக்க வேண்டும்.

2. ஒரு சமுதாய மக்களை அதன் பொருள் வகை மற்றும் சமுதாய மேம்பாட்டில் அக்கறை கொள்ளவும் அதற்குப் பொறுப்பேற்கவும் தூண்ட உருவான கொள்கைகள் – முறைகளின் தொகுப்பு.

## COMMUNITY EDUCATION

### சமுதாயக் கல்வி

1. கல்வி அனைத்தும் சமுதாய நலன்களை நிறைவு செய்வதிலிருந்து தொடங்க வேண்டும்; அதன் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும் என்னும் கொள்கை – கொள்கையின் நடைமுறையாக்கம். இந்தக் கருத்தில் சமுதாயம் என்பது குறிப்பிட்ட ஒரு நகர / கிராம வட்டாரவாசிகளாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இவர்கள் ஒரு குழு அடையாளமும் குறிப்பான பொது நலன்களும் பொதுவாக உடையவர்கள். சமுதாயக் கல்வி, சமுதாயத்துக்கான கல்வி என்பது மட்டுமல்ல; மாறாக, சமுதாயம் கல்வியின் மீது முக்கியமான தீர்மான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும்; அதை வழங்குவதில் உயர்ந்த அளவு பொறுப்புடனிருக்க வேண்டும்.

2. முறையான பள்ளி அமைப்புக்கு வெளியே எல்லா வயது மக்களின் சமூக, பொழுதுபோக்கு, பண்பாட்டு, கல்வி நடவடிக்கைகளுக்கான அமைப்பு. ஒரு சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது இதன் நோக்கம்.

## COMMUNITY EDUCATION COUNCIL

### சமுதாயக் கல்விக் குழு

கல்வி, பொழுதுபோக்கு, சமுதாய, பண்பாட்டு, குடிமை

நடப்புகளிலும் பிற நடவடிக்கைகளிலும் ஈடுபடும் உள்ளூர் அல்லது வட்டார முகமைகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் குழு. சமுதாயத்தின் அல்லது வட்டாரத்தின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக இது உள்ளது. இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதே இதன் நோக்கம்.

## COMMUNITY EDUCATION WORKER

**சமுதாயக் கல்வி ஊழியர்**

முறையான பள்ளி அமைப்புக்கு வெளியே எல்லா வயதினருக்காகவும் ஏற்பாடு செய்யப்படும் சமூக, பொழுது போக்கு, பண்பாட்டு அல்லது கல்வி நடவடிக்கைகளைத் தூண்டும் – ஒழுங்கமைக்கும் அல்லது நடத்தும் ஊழியர். இதன் நோக்கம் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். அவர் / அவள் பகுதி நேரர் ஆகவோ முழு நேரர் ஆகவோ சம்பளம் வாங்குபவராகவோ சேவையாகச் செய்பவராகவோ இருக்கலாம்.

## COMMUNITY EDUCATOR

**சமுதாயக் கல்வியாளர்**

காண்க:
Community Education Worker

## COMPARATIVE ADULT EDUCATION

**ஒப்பீட்டு வயது வந்தோர் கல்வி**

வெவ்வேறு நாடுகளிலும் சமுதாயங்களிலும் இருக்கும் வயது வந்தோர் கல்விக் கோட்பாட்டையும் நடைமுறையையும் ஒப்பிடுவது தொடர்பான ஆய்வுத்துறை. தன் நாட்டிலோ மற்றவர் நாட்டிலோ உள்ள கல்விசார் சிக்கல்கள் அல்லது நிகழ்வுகள் பற்றிய புரிதலை அகலப்படுத்துவதும் ஆழப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

## COMPENSATORY EDUCATION

**ஈடுசெய் கல்வி**

கட்டாயக் கல்வி பயிலும் கட்டத்தில் இயல்பாகத் தாம் பெற்றிருக்கக்கூடிய கல்வியைப் பகுதியாகவோ முழுமையாகவோ ஏது காரணத்தினாலோ இழந்தவருக்கு

அதை ஈடுசெய்யும் நோக்கத்துடன் கூடிய கல்வி.

## COMPETENCY BASED EDUCATION

### தகுதி அடிப்படைக் கல்வி

குறிப்பிட்ட பாத்திரம்/ தொழில் / வாழ்க்கைப் பணிக்குத் தேவையான அறிவு – திறன்கள் – நடத்தை மற்றும் பான்மைகளின் இயங்கு குறிப்பு, படிப்பு மற்றும் செய்து காட்டலில் இருந்து பெறப் படும் கல்வி.

## CONNAISSANCE DU MILIEU

### சூழல் ஆய்வு

இயற்பியல் மற்றும் சமூகச் சுற்றுச்சூழலைச் சிறப்பாகப் புரிந்து கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கூடிய சமூக – கல்வியியல் நடவடிக்கையின் ஒரு வடிவத்தைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல். சமூகவியல் அளவாய்வு முறைகளும், மக்கள் தொகை இயல் – பொருளியல் – நிர்வாகவியல் – பண்பாட்டியல் – சமூகவியல் முதலான சூழலின் பல்வேறு கூறுகள் குறித்த ஆய்வும் இதற்கு வழியாகும். சமுதாய வளர்ச்சித் துறையில் தூண்டல் பணியின் தேவைகளுக்குக் குறிப்பாக நல்ல முறையில் ஒத்துப் போவதாக அங்கீகரிக்கப்படுகிறது. எனவே பிரெஞ்சு பேசும் நாடுகளில் தூண்டலாளர்கள் பயிற்சியில் அடிக்கடி இது சேர்க்கப்படுகிறது.

## CONSCIENTIZATION

### தன்உணர்வூட்டல்

அளவுகடந்த வறுமையான நிலைமைகளில் வாழும் படிக்காத மக்கள் தன் சொந்த விதியின் மேல் தேர்ச்சிகொண்டு விடுதலையைச் சாதிக்க உதவும் கல்வியியல் நடைமுறை. தன் நிலைமையின் மேல் வினைபுரிந்து அதை மாற்றக் கூடும் விதத்தில் விழிப்புணர்வையும் திறனாய்வுத் திறத்தையும் வளர்க்க இது முயல்கிறது. உரையாடல் முறைச் செயற்பாட்டுக்கு அணியப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வெளியீடு போர்த்துக்கீசியரிடமிருந்து எடுக்கப்படுகிறது.

**CONSUMER EDUCATION**

**நுகர்வோர் கல்வி**

பண்டங்களையும் பணிகளையும் நுண்ணறிவுடனும் திறம்படவும் வாங்கும் – பயன்படுத்தும் முறைகள் தேர்ந்த பண நிருவாகம். நுகர்வோருக்கும் பொருளியல் அமைப்புக்கும் இடையிலான உறவு பற்றிய கல்வி.

**CONTINUING EDUCATION**

**தொடர் கல்வி**

1. குழந்தைப் பருவத்தில் முழுநேரக் கல்விச் சுற்றை நிறைவு செய்தவர்களுக்கு அளிக்கப்படும் அல்லது அவர்கள் மேற்கொள்ளும் கல்வி. Adult Educationக்கு ஒத்த பொருளுடைய சொல்.

2. ஐக்கிய அமெரிக்காவில், அரசு மற்றும் தனியார் முகமைகளால் வழங்கப்படும் தொடக்கநிலை – இடைநிலை – மேனிலை ஆகிய மொத்தக் கல்வி வாய்ப்புகளையும் குறிக்கப் பயன்படும் சொல். இதில் பங்கேற்கும் ஒத்த வயதினரும் ஏட்டுப் படிப்பு, தொழிற்கல்வி, ஓய்வு நேர மற்றும் சுய மேம்பாடு ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள்.

**CONTINUING EDUCATION CENTRE**

**தொடர் கல்வி மையம்**

காண்க:
வயது வந்தோர் கல்வி மையம்

**CONTINUING EDUCATION COUNCIL**

**தொடர் கல்விக்குழு**

காண்க:
வயது வந்தோர் கல்விக்குழு

**CONTINUING EDUCATION UNIT (CEU)**

**தொடர் கல்வி அலகு (சிஇயு)**

ஐக்கிய அமெரிக்காவில் பல நிறுவனங்கள் பயன்படுத்தும் இந்த அலகு, கைம்மாறு கருதாத் தொடர் கல்வித் திட்டங்களுக்கான ஒரே சீரான அளவு அலகாக உள்ளது. ஒரு சிஇயு என்பது “பொறுப்புடைய வழங்குகை, திறமுடைய வழிகாட்டல் மற்றும் தகுதி பெற்ற பயிற்சியளிப்பின்கீழ் ஆன ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட – தொடர்கல்வி

அனுபவத்தில் பங்குபெற்ற பத்துமணி நேரத்துக்குச் சம மாகும்" என 1970இல் வரை யறுக்கப்பட்டது. சிஇயுவுக்கு ஒரு திட்ட இயக்குநர் சுதந்திர மான ஆய்வு, தொடர் வேலை மற்றும் கள ஆய்வுக்காக வருணிக்கலாம். பொதுவாக வேலை அனுபவம் விளக்கப் படுகிறது.

## CONTINUING PROFESSIONAL EDUCATION

### தொடர் தொழிற்கல்வி

உயர்நிலை அலுவல்கள் அல்லது பணிகளில் இருப் போர் அவர்களின் துறைகளில் நடந்துள்ள மிக அண்மைக் கால வளர்ச்சிகளைத் தெரிந் தவராகவும் தம் தொழில் அல் லது பணிச்சூழல் தொடர்பான புதிய திறன்களை அடைந்தவ ராகவும், தாம் இயங்கும் சமூகச் சூழலைப் புரிந்தவராக வும் திகழ்வதற்காக வடி வமைக்கப்பட்டது.

## CO-OPERATIVE EDUCATION

### கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவு இயக்கங்கள் வழங்கும் கல்வித் திட்டங்கள். உற்பத்தியாளர்கள் மற்றும்/ அல்லது நுகர்வோரின் இணைவைப் பொருளியல் உற்பத்தி மற்றும் / அல்லது பண்டங்களின் பகிர்வுக்காக ஊக்குகிறது. இவற்றின் ஆதா யங்களை அவர்கள் பகிர்கிறார் கள். இலக்கத்தின் கோட்பாடு கள் மற்றும் நடைமுறை பற்றிய கல்வியும் திட்டங் களில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றோடு அவை வரம்பிடப்படுவ தில்லை.

## CO-OPERATIVE EXTENSION

### கூட்டுறவு விரிவாக்கம்

நடப்புச் சிக்கல்களை எதிர் கொள்ள உழவு, வீட்டுப் பொரு ளியல், மற்றும் தொடர்பான தலைப்புகளில் பயனுள்ள நடைமுறைத் தகவலையும் கற்றுக்கொள்ளும் அனுபவங் களையும் செய்து காட்டல் மூல மாக வெளியீடுகள் முதலான வழிகள் மூலமாக வழங்கும் நோக்கில் அரசாங்கமும் நிலக் கொடை நிறுவனங்களும் ஒத் துழைப்பதைக் குறிக்க ஐக்கிய அமெரிக்காவில் பயன்படும் செயற்பாடு.

## CORRESPONDENCE EDUCATION

**அஞ்சல்வழிக் கல்வி**

ஆசிரியரும் பயில்வோரும் நேருக்கு நேர் சந்திக்காமலே அஞ்சல்வழி நடத்தப்படும் கல்வி. எழுதிய அல்லது நாடாவில் பதிந்த பாடத்தைப் பயில்பவருக்கு அனுப்புவதன் மூலம் கற்பித்தல் நடைபெறுகிறது. எழுதிய அல்லது நாடாவில் பதிந்த பயிற்சிகளை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் மாணவரின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. அவற்றை ஆசிரியர் திருத்தி, தக்க அறிவுரையுடன் மாணவருக்குத் திரும்ப அனுப்பி வைக்கிறார்.

**வேறுபெயர்**

Correspondence study

## CORRESPONDENCE STUDY

**அஞ்சல்வழிப் படிப்பு**

*காண்க:*
Correspondence Education

## COUNTY AGENT

**ஊரக முகவர்**

*காண்க:* Extension agent

## COUNTY EXTENSION WORKER

**ஊரக விரிவாக்கப் பணியாளர்**

*காண்க :* Extension agent

## CROSS-CULTURAL TRAINING

**பண்பாட்டிடைப் பயிற்சி**

இடைவினைத் திறன்களில் தேர்ச்சியையும் சமூகங்களுக்கிடையிலான பண்பாட்டு வேர் கொண்ட வேறுபாடுகளில் புரிதலையும் அதிகரிக்கத் திட்டமிட்ட நடவடிக்கைகள். இந்த முறைகளில் வழக்கமாக, உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாய்க் கொண்ட - ஒருவிதப் போலச் செய்தல் பயிற்சியும் அனுபவ அடிப்படையிலான மனித உறவுகள் பயிற்சியும் அடங்குகின்றன.

## CULTURAL CENTRE

**பண்பாட்டு மையம்**

*காண்க:* Arts Centre

# D

## DAY RELEASE

**படிப்பு விடுப்பு நாள்**

சீரான இடைவேளைகளில் (வழக்கமாக வாராவாரம்) ஒரு நாள் அல்லது பகுதிநாள் வேலையிலிருந்து விடுவித்து விடல். பெரிதும் ஊதிய இழப்பின்றி ஒரு பணியாளர் ஒரு படிப்பை / பயிற்சியைத் தொடர வாய்ப்பாக இது அளிக்கப்படுகிறது.

## DAYTIME CLASS

**பகல் வகுப்பு**

காண்க: Daytime course.

## DAYTIME COURSE

**பகற் படிப்பு**

வழக்கமான வேலை நேரங்களில் நடத்தப்படும் படிப்பு. வகுப்பில் கலந்துகொள்ளப் பணிவகுப்பு பெற்றுள்ள வயது வந்தோருக்காகவோ, (வீட்டிலிருக்கும் மனைவிகள், பணி ஓய்வு பெற்ற அல்லது வேலையற்ற ஆண்கள் போன்ற) ஊதியம் பெறும் பணிகளில் இல்லாதவருக்காகவோ இது நடத்தப்படுகிறது.

## DETERIORATION QUOTIENT

**சீர்கேட்டு ஈவு**

குறிப்பிட்ட வயதில் தனி ஒருவரின் நுண்ணறிவுச் சீர்கேட்டின் அளவு. வழக்கமாக இது வயதேற ஏறச் சீர்கெடும் செயற்பாடுகளுக்கும் அப்படிச் சீர்கெடாச் செயற்பாடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை அளவிடுவதன் மூலமாக மதிப்பிடப்படுகிறது.

## DISCUSSION GROUP

**விவாதக் குழு**

விவாத முறை வழியாகக் கற்றுக் கொள்வதற்காக உள்ள குழு அல்லது அம்முறை வழி கற்பதில் ஈடுபட்டுள்ள குழு.

## DISCUSSION METHOD

**விவாத முறை**

குழுவாகச் சேர்ந்து கற்றுக் கொள்ளும் ஒரு முறை. இதில் ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒரு சிக்கலுக்கு ஆன தீர்வு பற்றிய தம் கருத்துக்களை வாய்மொழியாக வெளியிடுகிறார்கள் –அல்லது அறிவைப்

பெருக்கிக் கொள்ளவோ ஒரு தலைப்பை விளங்கிக் கொள்ளவோ இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள். இம்முறை வெற்றி பெற விவாதத் தலைப்புக்குத் தொடர்பான அறிவு அல்லது அனுபவம் பங்கேற்போருக்கு இருந்தாக வேண்டும். எனவே இது குறிப்பாக வயது வந்தோர் கல்விக்குப் பொருந்தியதாகக் கருதப்படுகிறது.

## DISENGAGEMENT THEORY

**விடுபாட்டுக் கோட்பாடு**

ஒருவர் வயதேற ஏற சமூகத்துடன் மென்மேலும் குறைவாகவே இடைவினை புரிகிறார்; குறைவான சமூகப் பாத்திரங்களையே மேற்கொள்கிறார்; அவர் தொடர்புடையவற்றிலும் குறைவாகவே ஈடுபட்டுக் கொள்கிறார்; மிக அரிதாகவே அவற்றை மாற்றிக் கொள்கிறார் எனக் கொள்ளும் ஒருகோட்பாடு.

## DISTANCE EDUCATION

**தொலைநிலைக் கல்வி**

ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் நேருக்கு நேர் தொடர்பில்லாமல் அஞ்சல், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி அல்லது செய்தித்தாள் வழியாக நடத்தப்படும் கல்வி. கற்கும் ஒருவருக்கோ குழுக்களுக்கோ எனச் சிறப்பாக உருவாக்கப்பட்ட பாடங்கள் அனுப்பி வைக்கப்படுவதன்வழி கற்பித்தல் நடைபெறுகிறது. ஆசிரியருக்கு அனுப்பப்படும் மாணவர்களின் எழுத்துவழி அல்லது குறுந்தகடுவழிப் பயிற்சிகளின் மூலம் அவர்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. அவற்றை ஆசிரியர் திருத்தித் தக்க அறிவுரையுடன் அவர்களுக்குத் திருப்பி அனுப்புகிறார்.

**வேறு பெயர்கள்**

Distance Study
Distance Teaching

## DISTANCE STUDY

**தொலைநிலைப் படிப்பு**

காண்க: Distance Education

## DISTANCE TEACHING

**தொலைநிலைக் கற்பிப்பு**

காண்க: Distance Education

**DROPOUT**

**இடைநிறுத்தர், இடைநிறுத்தல்**

1. தான் தொடங்கிய படிப்பை அது நிறைவுறும் முன்பே கைவிடுபவர்.

2. ஒரு படிப்பை அது நிறைவுபெறும் முன்பே கைவிடும் செயல்.

**DROPOUT RATE**

**இடைநிறுத்தல் வீதம்**

ஒரு படிப்பில் சேரப் பதிவு செய்து அது முடியுமுன் கைவிட்டோரின் எண்ணிக்கை அல்லது விகிதம்.

---

# E

---

**EDUCATION**

**கல்வி (இயல்)**

ஆங்கிலத்தில் கல்விக்கும் (education) பயிற்சிக்கும் (training) எப்போதும் ஒரு பாகுபாடு செய்யப்படுகிறது. கல்வி என்பது குறிப்பிட்ட ஒரு பணிக்கு மட்டும் தொடர்புடைய அறிவு மற்றும் திறன் என்பதைவிட வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தேவைப்படும் அறிவு, அற மதிப்பீடுகள், புரிதல் யாவற்றையும் வளர்ப்பதைக் குறியாகக் கொண்ட நடவடிக்கைகள் என வரையறுக்கப்படுகிறது. இளையோருக்கும் வயதுவந்தோருக்கும், தாம் வாழும் சமூகத்தைப் பாதிக்கும் மரபுகள் மற்றும் கருத்துக்களையும், தம்முடைய மற்றும் பிறருடைய பண்பாடுகளையும், இயற்கையின் விதிகளையும் பற்றிய புரிதலை வளர்க்கவும், கற்றலுக்கும் தொடர்பு கொள்வதற்கும் அடிப்படையான மொழி முதலான திறன்களைப் பெறவும் இன்றியமையாத நிலைமைகளை வழங்குவதே கல்வியின் நோக்கமாகும்.

**EDUCATION INFORMATION CENTRE**

**கல்வித் தகவல் மையம்**

சமூக / சமுதாய முகமைகளாலோ கல்வி நிறுவனங்களாலோ இயக்கப்படும் சமுதாய அடிப்படையிலான சேவை. இது நடப்பில் கிடைக்கும் கல்வி வாய்ப்புகள் பற்றிய தகவலை வழங்குகிறது. சில

நேரங்களில் அவை பற்றிய வழிகாட்டலையும் வழங்குகிறது.

## EDUCATION OFFICER
**கல்வி அலுவலர்**

காண்க:

பயிற்சி அலுவலர்
Training Officer

## EDUCATIONAL BROKERING
**கல்வித் தொடர்புப் பணி**

வயது வந்தோரை, கிடைக்கக்கூடிய பரந்த வீச்சிலான கல்வி வாய்ப்புகளுடன் தொடர்புறுத்தும் – பயில்வோரை மையப்படுத்திய தகவல் மற்றும் வழிகாட்டல். இதில் தகவல் வழங்கல், வழிகாட்டல், மதிப்பிடல், பொருந்திய முகமைகளுக்கு வயதுவந்தோரை அறிமுகப் படுத்துதல், கற்பதற்கான அவர்களின் கோரிக்கைகளை ஆதரித்தல் ஆகியவை அடங்குகின்றன.

## EDUCATIONAL GERONTOLOGY
**கல்வி மூப்பியல்**

வயது வந்தோர் கல்வியின் இடைப்பரப்பில் முதிய வயது பற்றியும் சமூகச் சூழலில் வயது முதிர்ச்சி பற்றியுமான அறிவியல் ஆய்வுப் படிப்பு மற்றும் நடைமுறை. இதில் முதிர்ந்த வயது வந்தோருக்குத் தகவல் வழங்கவும் அவர்களின் பான்மைகள் மற்றும் நடத்தையை மேம்படுத்தவுமான கல்வி, முதியோர் குறித்த மனப்பான்மைகளை மேம் படுத்த வயது மூப்பு குறித்த பொதுக்கல்வி, இந்தத் துறையில் பணிபுரியும் தொழில் முறையாளர் மற்றும் நடைமுறையாளர்களுக்கான முன் பயிற்சி மற்றும் இடைப் பயிற்சிக் கல்வி ஆகியவை அடங்குகின்றன.

## EDUCATIONAL LEAVE
**கல்வி விடுப்பு**

ஒருவர் ஒரு படிப்பு/ பயிற்சியைத் தொடரப் பணியிலிருந்து அவருக்கு அளிக்கப்படும் விடுப்பு.

## EFFECTIVE ATTENDANCE
**பயனளவு வருகை**

1. ஒருவருக்கு ஒரு படிப்பின்போது அப்படிப்பின் அடிப்

படை இலக்கினை அடையக் குறைந்த அளவு தேவை எனக் கருதப்படும் வருகைகளின் எண்ணிக்கை.

2. ஒரு பாடத்தில் இந்தக் குறைந்த அளவை எட்டிய மாணவர்களின் எண்ணிக்கைப் புள்ளி விவரம் சிலநேரங்களில் வயதுவந்தோர் கல்வி அமைப்புகளுக்கான பொது நிதிகளிலிருந்து பெறும் உதவித் தொகைகளைக் கணக்கிடப் பயன்படுகிறது.

## EFFICIENCY QUOTIENT
**செயல்திறன் ஈவு**

தம் நுண்ணறிவு மற்றும் உடல் திறனின் உச்சியில் இருக்கும் வயதுவந்த இளையோருடன் ஒப்பிடும்போது அறியப்படும் ஒரு வயது வந்தோரின் நுண்ணறிவுத் திறன்.

## END-ON-COURSE
**மேற்செல்லும் படிப்பு**

தன்னளவில் முற்றுப் பெற்று விட்டாலும், அதிகத் திறனுள்ள மாணவர் மேலும் உயர்ந்த தகுதிக்கான படிப்புக்கு நேரடியாக முன்செல்ல முடியுமாறு அமைக்கப்பட்டுள்ள தொடர்கல்விப் படிப்பு.

## ENQUIRY BASED EDUCATION
**விசாரணை அடிப்படையிலான கல்வி**

பயிலும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு தொகுதியும் தீர்க்கப்படவேண்டிய ஒரு சிக்கலாக, கண்டுபிடிக்கப்படவேண்டிய ஒரு செய்தியாகக் கொள்ளப்படும் கல்வி. இந்த அணுகுமுறை, வட அமெரிக்காவில் வயதுவந்தோர் அடிப்படைக் கல்விக்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

## ENROLMENT
**பதிவு**

1. ஒரு படிப்பு/பயிற்சித் திட்டத்தில் முறைப்படி சேரும் செயல்.

2. ஒரு படிப்பு/ திட்டத்தில் முறைப்படி சேர்ந்தோரின் எண்ணிக்கை.

## ENVIRONMENTAL EDUCATION

**சுற்றுச்சூழல் கல்வி**

மனிதருக்கும் அவரது இயற்கை, செயற்கைச் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான உறவுகளையும் இரண்டுக்கும் இடையிலான இருபுறச் சார்பு நிலையையும் இந்த உறவைப் பாதிக்கும் காரணிகளைப் பற்றிய புரிதலையும் மதிப் பீட்டையும் வளர்ப்பதைக் குறி யாகக் கொண்ட கல்வி. நகரத் திட்டமிடல், காற்று மண்டல மாசுபாடு, ஒலிமாசு, மக்கள் தொகை அடர்த்தி போன்ற சிக்கல்களுக்குச் சுற்றுச்சூழல் கல்வி முதன்மை அளிக்கிறது.

## ESL (ENGLISH AS A SECOND LANGUAGE)

**ஈஎஸ்எல் (இரண்டாம் மொழியாக ஆங்கிலம்)**

ஆங்கிலம் சொந்த மொழி அல்லாதோர் ஆங்கிலத்தைக் கற்பித்தல் / கற்றல்.

## EVENING CLASS

**மாலை வகுப்பு**

காண்க: Evening course

## EVENING COLLEGE

**மாலைக் கல்லூரி**

இந்த வடஅமெரிக்கச் சொல் குறிப்பவை:

1. சாதனை மாணவர்கள், சாதா மாணவர்கள் இருவருக் குமே மாலைநேரக் கல்வி வழங்கும் தனிப்பட்ட நிறு வனம் அல்லது ஒரு பல்கலை அல்லது கல்லூரியின் தனித்த நிர்வாகப் பிரிவு. முழுநேர மாணவர்களைவிட அதிகமான பேருக்கு கல்வியைப் பரப்பு வதே இதன் நோக்கமாகும்.

2. காண்க : Night School

## EVENING COURSE

**மாலைப் படிப்பு**

மாலையில் நடத்தப்படும் படிப்பு வகுப்பு. எனவே, வழக் கமான வேலை நேரத்துக்கு அப்பால், வேலையிலிருப் போரும் கலந்துகொள்ள முடியக்கூடிய படிப்பு.

**வேறுபெயர்**

Evening Class

**EVENING INSTITUTE**
**மாலைப் பயிலகம்**
*காண்க:* Night School

**EXPERIENTIAL LEARNING**
**அனுபவப் படிப்பு**
பொதுவான வாழ்க்கை அனுபவத்திலிருந்தோ பயில்பவரின் குறிப்பான செயற்பாடுகளிலிருந்தோ பெறப்படும் படிப்பு. அப்படிப்பட்ட அனுபவங்களின் ஊடாகப் போகும் போதோ பிறகோ மாணவருள் எழும் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளில் இருந்து கிடைக்கும் படிப்பினை.

**EXTENSION**
**விரிவாக்கம்**
*காண்க:* Extension education

**EXTENSION AGENT**
**விரிவாக்க முகவர்**
அரச நிலக்கொடை அமைப்பு மற்றும் ஐக்கிய அமெரிக்க உழவுத்துறையின் அதிகாரப் பேராளர். இவர் உழவுத்துறையில் கூட்டுறவு விரிவாக்க வேலையையும் தொடர்பான செயற்பாடுகளையும் நடத்துகிறார். இது ஊரக வாழ்வை மேம்படுத்த என்றாலும் நகரப் பகுதிகளுக்கும் இது பெருமளவு பொருந்துகிறது.

**வேறு பெயர்கள்**
County Agent
County Extension Worker

**EXTENSION DEGREE**
**விரிவாக்கப் பட்டம்**
பல்கலையின் விரிவாக்கத் துறை மூலம் ஒரு பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு வட அமெரிக்காவில் வழங்கப் படும் பட்டம்.

**EXTENSION EDUCATION**
**விரிவாக்கக் கல்வி**
ஒரு கல்வி நிறுவனத்தின் அல்லது சமுதாய முகமையின் மூலவளங்கள் அந்தப் பகுதியிலுள்ள பரந்துபட்ட வாடிக்கையாளர்களுக்குப் பயன்படும் படி விரிவுபடுத்துவதற்கான அறிவுறுத்தல் நடவடிக்கைகள்.

**வேறு பெயர்**
Extension

**EXTERNAL DEGREE**
**புறநிலைப்பட்டம்**

பல்கலைக்கு முறையாக வருகை தராமல் தேவையான அறிவு நிலையை அடைந்து கொள்ளும் பயில்வோருக்குப் பல்கலை வழங்கும் பட்டம்.

# F

**FACILITATOR**
**எளிதாக்குநர்**

பயில்வோருக்கு அல்லது பயில்வோர் குழுவுக்குச் சொந்தப் படிப்பு நோக்கங்களில் உதவுவதில் திறமை பெற்ற முன்னோடி. அந்நோக்கங்களை அடையும் வழிவகைகளைத் தேர்ந்தெடுக்கவும் உதவுபவர்.

**FOLK HIGH SCHOOL**
**நாட்டார் உயர்பள்ளி**

1. ஆஸ்திரியா, ஜெர்மன் கூட்டுக் குடியரசு, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து நாடுகளில் முதன்மையாய் மாலையில் மட்டுமன்றி பகலிலும் வயதுவந்தோருக்கான படிப்புகளை வழங்கும் நிறுவனம்.

2. இடைநிலைக்குப் பிந்திய – பல்கலைக்கு முந்திய நிலையில் தங்கிப் படிக்கும் கல்வி நிறுவனம், பெரிதும் தம் பதின் வயதுகளின் முடிவிலும் இருபதுகளின் தொடக்கத்திலும் இருக்கும் இளையோர் இதில் சேர்கின்றனர். இவ்வித நாட்டார் உயர்பள்ளிகள் பெரிதும் ஸ்காண்டிநேவியாவில் உள்ளன.

**FORCES EDUCATION**
**படையினர் கல்வி**

காண்க:
Armed Forces Education

**FORMAL ADULT EDUCATION**
**வயதுவந்தோர் முறைசார் கல்வி**

1. ஒரு ஆசிரியரால் திட்டமிடப்பட்டு நடத்தப்படும் படிப்புத் திட்டத்தைப் பயில்வோர் பின்பற்றும் முறையில் கட்டமைத்த – வரிசையாக ஒழுங்கமைத்த வயதுவந்தோர் கல்வி.

2. விருது, பட்டயம், பட்டம் அல்லது தொழில்முறைத் தகுதி போன்ற கல்வி பயில்வதற்கான – ஏதாவது முறையான அங்கீகாரத்திற்கு இட்டுச் செல்லும் நோக்கத்துடன் கூடிய வயதுவந்தோர் கல்வி.

## FORMAL EDUCATION
**முறைசார் கல்வி**

1. தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைகளிலும் முழுநேரத் தொழில்நுட்ப மற்றும் மேனிலைச் சிறப்புப் படிப்புகளிலும் வழங்கப்படும் – கட்டமைக்கப்பட்ட – காலவரிசைப் படுத்தப்பட்ட கல்வி. அத்தகைய கல்வியை வழங்கும் நிறுவனங்களின் தொகுதியைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

2. கற்பவர் – கற்பிக்கப்படுபவர் ஆகியோரின் பாத்திரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டதும் முறைப்படுத்தப்பட்டதும் கால ஒழுங்குபட்டதுமான எந்தக் கல்வியையும் குறிக்கிறது. பின்னவர்க்குக் கற்பிக்க முன்னவர் நெறிப்படுத்தவும் பொறுப்பேற்றுக் கொள்ளவும் செய்கிறார்கள்.

3. பயில்வோரின் பதிவை வேண்டும்/ தேவைப்படுத்தும் கல்வித் திட்டங்கள். (யுனெஸ்கோ பன்னாட்டுத் தர வகைப்பாட்டுக் கல்வி).

## FORUM
**அரங்கு, மேடை, களம்**

ஒரு பயில் குழுவுக்கும் விவாதத்துக்குட்பட்ட தலைப்பில் சிறப்பறிவைக் கொண்டு வரும் ஒருவருக்கும் பலருக்கும் இடையில் விவாதம் நடைபெறும் அரங்கு.

## FUNCTIONAL ILLITERATE
**செயற்பாட்டில் கல்லாதவர்**

படிப்பது, எழுதுவது, கணக்கிடுவது போன்ற அடிப்படைத் திறன்கள் அடையப் பெறாதவர். இதனால் அத்தகைய திறன்கள் சமூகத்தில் தேவைப்படும் நடவடிக்கைகளில் பங்குபெற இயலாதவர்.

## FUNCTIONAL LITERACY
**செயற்பாட்டுப் படிப்பறிவு**

தன் குழுவும் சமுதாயமும் திறம்படச் செயற்படவும் தன் மற்றும் சமுதாய வளர்ச்சிக் காகப் படிப்பு, எழுத்து, கணக்கு ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தக் கூடியவராகவும் ஆவதற்கான படிப்பறிவு. தேவையான அனைத்து நடவடிக்கை களிலும் ஒருவர் ஈடுபடுமாறு வாசிக்கவும் எழுதவும் கணக் கிடவும் கூடிய திறன். ஸ்பானிய alphabetizacion functionalஉம் பிரெஞ்சீய alphabetization functionelle உம் இத்திறனை உடையவரா யிருப்பதைவிட அதை அடை யும் / கற்பிக்கும் நிகழ் முறை யையே சிறப்பிப்பது கவனிக் கத்தக்கது.

## FURTHER EDUCATION
**கூடுதல் மேற்கல்வி**

1. தொழிற்கல்வி முனைப் புள்ள – பள்ளிக்குப் பிந்திய கல்வி. முதன்மையாக 16–20 வயதில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுவது. சிறிது உயர் கல்வியும் இதில் சேரலாம். பிரெஞ்சில் education complementaire குறைந்த தொழிற்கல்வி முனைப்பே உடையது.

2. ஐக்கிய இங்கிலாந்தில் வட்டார அலுவலர்களால் நடத் தப்படும் பள்ளி தாண்டிய மற்றும் பண்பாட்டின் அனைத்து நடவடிக்கைகளை யும் குறிக்கப் பயன்படுகிறது.

## FURTHER TRAINING
**கூடுதல் மேற்பயிற்சி**

ஏற்கனவே தனக்கு ஓரளவு தேர்ச்சியுடைய துறையில் / செயற்பாட்டில் பெறும் கூடு தல் பயிற்சி.

---

# G

---

## GENERATIVE WORDS
**உருவாக்கச் சொற்கள்**

1. வளரும் நாடுகளில் பயன் படுத்தப்படும் எழுத்தறிவுப் பயிற்சியின் உள – சமூக முறைகளுள் இது ஒரு சொற் றொகுதி. கருப்பொருளுக் குரிய சுற்றுச்சூழல் மீதான ஆய்வின் விளைவென அடை யாளம் காணப்படுகிறது. இது பின் வாசிக்கவும் எழுதவுமான

உத்திகளைக் கற்பிக்க அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகிறது.

2. எழுதப் படிக்க அடிப்படையான உத்திகளைக் கற்பிக்க எழுத்தறிவுப் பயிற்சியில் பயன்படும் சொற்றொகுதி.

**GLOBAL ANIMATION**
**முழுதளாவிய தூண்டல்**

1. கல்வியியல்/ சமூகவியல் நோக்கங்களையும் கடந்து, ஒரு ஆளுமை என்னும் முறையில் ஒருவரின் முழுமையான வளர்ச்சியை இலக்காகக் கொள்ளும் தூண்டுதல். இதற்கு அடிப்படை, சமூக – பண்பாட்டு முன்னேற்றமும் பொருளியல் வளர்ச்சியும் ஒன்றை ஒன்று சார்ந்தவை; எனவே அவற்றை ஒரு ஒருங்கிணைந்த நிகழ்முறையாகவே கருதவேண்டும் என்ற நம்பிக்கையே ஆகும்.

2. தூண்டல் பணியில் பயன்படும் மொத்த முறைகள் – உத்திகளின் தொகுதி.

**GROUP DYNAMICS**
**குழு இயக்கவியல்**

ஒரு குழுவின் உறுப்பினர்களது நடத்தையின் மற்றும் பொதுவாகக் குழுக்களின் நடத்தையின் இடைவினைக்கு அடிப்படையான கோட்பாடுகள். குழு இயக்கவியலின் ஆய்வு, கல்வி மற்றும் பயிற்சிக்கான குழு முறைகளுக்குக் கோட்பாட்டு ஆதரவு வழங்குகிறது.

---

## H

---

**HIGH SCHOOL EQUIVALENCY PROGRAMME**
**உயர்நிலைப் பள்ளி நிகர் திட்டம்**

அரசின் கல்வித்துறையில் வழங்கப்படும் உயர்நிலைப் பள்ளிச் சான்றிதழுக்கு இணையான சான்றிதழ் பெறுவதற்காக வயதுவந்தோர் தயார் ஆகவும் தேர்வுகள் எழுதவும் உதவும்படி வடிவமைக்கப் பட்ட நடவடிக்கைகள். ஐக்கிய அமெரிக்காவில் புழங்கும் சொல்.

## HUMAN RELATIONS TRAINING

**மனித உறவுப் பயிற்சி**

ஆழமான தன் உள்காட்சியுடன் கூடிய சிறு குழுவின் இடைவினை, ஆளிடை உறவுகளின் இயக்கவியல், சமூகத் தகுதி பெறுவதற்கான பல்வேறு முறைகள் ஆகியவற்றிலான ஆய்வைப் புரிந்து கொள்ளப் பயன்படும் பொதுச் சொல்.

# I

## ILLITERACY

**படிப்பின்மை**

எழுதப் படிக்க இயலாமை. சிலநேரங்களில் கணக்கிட இயலாமையும் இக்கருத்தில் சேர்த்துச் சொல்லப்படுகிறது.

## ILLITERATE

**படிக்காதவர்**

வாசித்தல், எழுதல் அல்லது கணக்கிடலில் அடிப்படைத் திறன்கள் அடையப் பெறாதவர்.

## ILLITERATE THROUGH DISUSE

**புழங்காநிலைப் படிக்காதவர்**

எழுத்தறிவுப் பயிற்சித் திட்டங்களின் தோல்வியை எடுத்துக்காட்டும் ஒரு குறிகாட்டியாக ஸ்பானியத்தில் அடிக்கடிப் பயன்படுத்தப்படும் சொல். எழுத்து, படிப்பு, கணக்குகளில் அடிப்படைத் திறன்கள் அடையப் பெற்றவர் அவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் இன்மையால் அவற்றை மறந்து விடுவதைக் குறிக்கிறது.

## IMMEDIATE MEMORY

**உடனடி நினைவு**

காண்க: Short Term Memory

## IN-COMPANY TRAINING

**குழுமம்சார் பயிற்சி**

ஒரு தொழில்நிறுவனம் தன் வளாகத்துக்குள் தன் ஊழியர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பதை மேற்கொள்ளல். வேலையின்போதே பயிற்சி நோக்கத்துக்காகத் தனியாக ஒதுக்கப்பட்ட இடத்திலே அது நடைபெறலாம்.

**INDEPENDENT LEARNER**

**தானே கற்பவர்**

தானாகக் கற்கும் ஒருவர். வேறு ஒருவரோ, அமைப்போ வழங்கும் முறைப்படுத்திய போதனையை நேருக்கு நேராகவோ தொலைநிலைக் கற்பிப்பு மூலமோ அல்லாமல் தானே கற்பவர்.

**வேறு பெயர்கள்**

Self - Directed Learners
Self - Learner

**INDEPENDENT LEARNING**

**தானே கற்றல்**

ஒருவர் வழக்கமாக (ஆனால் எப்போதும் அல்ல) தானே தொடங்கி, இன்னொருவரின்/ முகமையின் வழிகாட்டல் / உதவி அறவே இல்லாமலோ குறைந்த அளவில் பெற்றோ மேற்கொள்ளும் படிப்பு.

**வேறு பெயர்கள்**

Independent Study
Self - Directed Learning
Self Education
Self Instruction

**INDEPENDENT STUDY**

**தற்படிப்பு**

காண்க: Independent Learning

**INDIVIDUAL STUDY**

**தனியர் படிப்பு**

குழுவாக இல்லாமல், தனியர் மட்டும் வழிகாட்டலுடனோ இல்லாமலோ மேற்கொள்ளும் படிப்பு.

**INDUSTRIAL TRAINING**

**தொழில்துறைப் பயிற்சி**

1. பொருள் உற்பத்திச் சாலைகளின் வேலைகளில் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

2. ஐக்கிய இங்கிலாந்தில் இச்சொல் தொழில்சார் பயிற்சியைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

**INFORMAL ADULT EDUCATION**

**வயதுவந்தோர்க்கான முறைசாராக் கல்வி**

1. வயது வந்தோர்க்கான கட்டமைந்த வரிசைப்படியான கல்வி. இதை வெற்றிகரமாக முடித்தால் முறைப்படியான

பரிசு, விருது, பட்டயம், பட்டம் அல்லது தொழில்தகுதி கிடைக்கும் என்பதற்காக அல்ல. மாறாக, வழக்கமாக உடனடி ஆர்வம் அல்லது தேவை என்ற வேறு ஒன்றை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

2. கற்றுக் கொள்வதற்குக் குறிக்கோள் உள்ள – ஆனால் கற்கும் அனுபவம்; பயில்வோருக்குக் கற்பிக்கும் பொறுப்புடைய ஆசிரியரின் வழிகாட்டுதலின்கீழ் ஆன – வகுப்பின் வடிவில் கட்டமைக்கப்படாத வயதுவந்தோர் கல்வி; அல்லது இது ஒரு முறைபோக்கான வரிசையில் ஒழுங்கமைக்கப்படும் தேவையும் இல்லை.

**INFORMAL EDUCATION**
**முறைசாராக் கல்வி**

அன்றாட அனுபவத்தில் இருந்தும் கல்வியின் தாக்கங்களில் இருந்தும் தன் சுற்றுச் சூழலில் கிடைக்கும் மூல வளங்களில் இருந்தும் தன் குடும்பத்தில் இருந்தும் அண்டையரிடம் இருந்தும் உழைப்பில் இருந்தும் விளையாட்டில் இருந்தும் கடைவீதியிலிருந்தும் நூலகத்தில் இருந்தும் வெகுசன ஊடகங்களில் இருந்தும் ஒவ்வொருவரும் பான்மைகளையும் மதிப்புகளையும் திறன்களையும் அறிவையும் பெறும் – வாழ்நாள் முழுவதும் நடக்கும் நிகழ்முறை.

**IN PLANT TRAINING**
**தொழிற்சாலைப் பயிற்சி**

காண்க: In company training.

**IN SERVICE EDUCATION**
**பணியிடைக் கல்வி**

வேலையில் இருப்போர் தம் வேலை தொடர்பான திறன்களையும் தகுதிகளையும் மேம்படுத்த உதவும் தொடர்ச்சியான மேலுமான படிப்பை வழங்கும் கல்வி.

**வேறு பெயர்**

Inservice Training

**IN SERVICE TRAINING**
**பணியிடைப் பயிற்சி**

காண்க: In Service Education

**INSTITUTE OF LABOUR STUDIES**

**தொழிலாளர் ஆய்வுகள் நிறுவனம்**

பிரெஞ்சு உயர்கல்வி நிறுவனம். தொழிலாளர் உறவுகளை ஆய்வதற்காகவும் அத்துறையில் உள்ள தொழிற் சங்க அலுவலர்கள் மற்றும் நிருவாகத்தின் மேற்கல்விக் காகவும் நிறுவப்பட்டது.

**INTELLECTUAL DETERIORATION**

**அறிவுச் சீர்கேடு**

ஒருவர் தன் அறிவுநிலை உச்சியை எட்டும் வயதுக்கு மேல் வயது முதிர்ச்சியுடன் சேர்ந்து அவரது அறிவுத் திறனில் படிப்படியாகக் குறைதல் நேரும் நிகழ்முறை. இந்த உச்சம் வழக்கமாகப் பதின் வயதுகளின் இறுதியில் அடையப்பெறுகிறது.

**INTERMITTENT EDUCATION**

**இடைவேளைக் கல்வி**

வேலை, ஓய்வு போன்ற வேறு நடவடிக்கைக் கட்டங்களுடன் பயிலும் காலகட்டங்கள் மாறி மாறிவரும் கற்றல் ஒழுங்கு.

**INTERNSHIP**

**இட அமர்வு**

காண்க: Placement

## J

**JOB - RELATED EDUCATION**

**வேலை தொடர்பான கல்வி**

வேலை நேர்த்திக்கும் பணிச் சூழலுக்கும் பயன்படும் அறிவுக்கும் திறன்களுக்கும் அழுத்தம் தரும் கல்வி. அவற்றின் பொருத்தப்பாடு பணிச் சூழலில் வெளிப்படும் விதத்தில் அவை அளிக்கப்படுகின்றன.

## L

**LABOUR EDUCATION**

**தொழிலாளர் கல்வி**

காண்க: Trade Union Education

## LAND - GRANT INSTITUTION

**நிலக்கொடை நிறுவனம்**

19ஆம் நூற்றாண்டு நடுவில் ஐக்கிய அமெரிக்காவில் கூட்டாட்சிச் சட்டத்தால் நிறுவப்பட்ட – பெரும்பாலும் கல்லூரி அல்லது பல்கலை நிறுவனம். தொழிலாளர் மற்றும் ஊரக மக்களுக்குத் தாராள – நடைமுறை சார்ந்த கல்வியை வளர்த்த அரசுகளுக்கும் கல்லூரிகளுக்கும் பொதுநிலங்களை மானியமாக அளித்தது அச்சட்டம்.

## LEADERSHIP TRAINING

**தலைமைப் பயிற்சி**

கல்வியியல் அல்லது சமூகப் பண்பாட்டுக் குழுக்கள் அல்லது நடவடிக்கைகளில் தலைமைத் திறன்களுக்குப் பயிற்சி.

## LEARNER - BASED EDUCATION

**பயில்வோர் அடிப்படையிலான கல்வி**

கல்வியின் உள்ளடக்கமும் கற்றல் மற்றும் கற்பித்தல் நடைமுறைகளும் அவற்றை வடிவமைக்கவும் கட்டுப்படுத்தவும் ஊக்கமாகப் பங்கேற்கும் பயில்வோரின் தேவைகளாலும் ஆசைகளாலும் தீர்மானிக்கப்படும் கல்வி. பயில்வோரின் சொந்த ஆதாரங்களையும் அனுபவங்களையும் அது அடிப்படையாக எடுத்துக் கொள்கிறது.

## LEARNING CENTRE

**கற்றல் மையம்**

கல்வித் தகவல், அறிவுரை உதவி, மதிப்பீடு வழங்கல் ஆகியவற்றில் வட்டார – சமுதாயத்துக்குள்ள தேவைகளை நிறைவேற்ற வடிவமைக்கப்பட்ட மையத்தைக் குறிக்க வடஅமெரிக்காவில் பயன்படும் சொல். இது தாமே கற்பவர்களுக்கு ஆதரவுப் பணிகளையும் குழுக்களுக்குக் கற்றல் திட்டங்களையும் வழங்கலாம். இது தனித்த நிறுவனமாகவும் இருக்கலாம் அல்லது கல்வி அமைப்புகளில் ஒன்றுடன் / அவற்றின் தொகுப்புடன் இணைக்கப்பட்டும் இருக்கலாம்.

## LEARNING CONSULTANT
**கற்றல் ஆலோசகர்**

கற்றல் திட்டங்களிலும் கல்வி ஆதாரங்களிலும் சிறப்பறிவரைக் குறிக்கும் வட அமெரிக்கச் சொல். பொருந்திய கல்விக் கருவிகளையும், முறைகளையும் தேடி இவர் தனி மாணவர்களோடும் மாணவக் குழுக்களோடும் சேர்ந்து வேலை செய்கிறார். பொதுவாக அவர்தாம் கல்வி பயில்வதன் நோக்கங்களை அடைவதை எளிதாக்குகிறார்.

## LEARNING CONTRACT
**கற்றல் ஒப்பந்தம்**

கல்வி பயில்வோருக்கும் ஆசிரியர் / உதவியாளர் ஆதரவு / முகமைப் பாத்திரத்தை நிறைவேற்றுபவர் முகமைக்கும் இடையிலான ஒப்பந்தம். இது ஒரு வாய்மொழி ஒப்புதலாகலாம் அல்லது எழுத்துவழி ஆவணமாகலாம். ஒவ்வொரு தரப்பின் கல்வி அனுபவம் மற்றும் பொறுப்புகள் குறித்த இலக்குகளையும் நிபந்தனைகளையும் இது வரையறுக்கிறது.

## LEARNING STRATEGY
**கற்றல் உபாயம்**

கற்றலின் குறிக்கோள்களை அடைவதற்காகக் கற்போரும் கல்வியாளரும் கடைப்பிடிக்கும் தலையாய கருத்தாக்கங்களையும் பொதுவான நடைமுறைகளையும் இப்பதம் குறிக்கிறது.

## LEARNING STYLE
**கற்றல் பாணி / நடை**

சிக்கல் தீர்க்கவும் சிந்திக்கவும் கற்றுக் கொள்ளவும் ஒருவர் வழக்கமாகப் பயன்படுத்தும் வழிகளின் தொகுப்பைக் குறிக்கிறது.

## LEISURE EDUCATION
**ஓய்வு (நேர)க் கல்வி**

ஓய்வு நேரத்தின் போது அல்லது ஓய்வு நேரத்தால் பங்கேற்போர் அதிகப் பயன் பெறும் படியாக வழங்கப்படும் கல்வி நடவடிக்கைகள். இந்த நடவடிக்கைகள் தொழில் சாராதவை; பெரிதும் பொழுது போக்கு மற்றும் பண்பாட்டுத் தலைப்புகள் சார்ந்தவை.

**வேறுபெயர்**

Leisure Time Education

### LEISURE - TIME EDUCATION
**ஓய்வு நேரக் கல்வி**

*காண்க:* Leisure Education

### LIBERAL ADULT EDUCATION
**வயது வந்தோர்க்கான பொதுக்கல்வி**

வயது வந்தவர் தன்னை ஒரு ஆளாகவும் ஒரு குடிமகனாகவும் உணரச்செய்யும் முறையில் பரந்த பொதுவான பண்பாட்டைப் புகட்டும் கருத்துடைய கல்வி. பொதுவாகக் கொள்கையளவில் எந்தப் பாடமும் விலக்கப்படுவதில்லை என்றாலும் வயது வந்தோருக்கான பொதுக்கல்வியின் நோக்கங்களை அடையும் விதத்தில் எந்தப் பாடமும் கற்பிக்கப்படலாம் என்றாலும், தன் நோக்கங்களை மிக எளிதாக அடைவதற்கு எனப் படிப்பறிவையும் சமூக, தத்துவ, வரலாற்று, கலைப் பாடங்களையும் அது முதன்மைப்படுத்துகிறது.

**வேறுபெயர்**

Liberal Studies

### LIBERAL STUDIES
**பொதுவான படிப்புகள்**

*காண்க:*

Liberal Adult Education

### LIBRARY EXTENSION
**நூலக விரிவாக்கம்**

அரசு நூலகங்களின் கல்வி – சமுதாய மேம்பாடு மற்றும் சமூகப் பரவல் திட்டங்கள்.

### LIFE EXPERIENCE
**வாழ்க்கை அனுபவம்**

ஒருவர் வாழ்வின் அனைத்து வேலை, கற்றுக் கொண்டவை மற்றும் அனுபவங்களின் மொத்தம். உருவாகிவரும் திறந்தவெளிக் கல்வி மற்றும் வாழ்நாள் படிப்பு ஆகிய முறைகளில் பங்கேற்க அல்லது விருதுபெற உள்ள தகுதியை மதிப்பிடுவதில் ஒரு முக்கியமான பகுதி.

### LIFE LONG EDUCATION
**வாழ்நாள் கல்வி**

கல்வி என்பது குழந்தைப் பருவத்தில் தொடங்கும் முழுநேரக் கல்விச் சுற்றை முடிப்பதுடன் முடிந்துவிடும் ஒரு வேளை அனுபவம் அல்ல. மாறாக வாழ்நாள் நெடுகத்

தொடரவேண்டிய ஒரு நிகழ்ச்சிப் போக்கு என்னும் கருத்து. வாழ்க்கை என்பதே ஒரு தொடர்ச்சியான கற்றல் நிகழ்முறைதான். ஆனாலும் வாழ்நாள் முழுவதும் மேலு மான புதிய கல்வியை – பொதுக்கல்வி, தொழிற்கல்வி இரண்டையுமே – பெறுவதற் கான குறிப்பான வாய்ப்பு களும் தேவைப்படுகின்றன. அதன்மூலமே அவர் தொழில் நுட்ப மற்றும் சமூக மாற்றத் தோடு இணைந்து செல்லலாம்; தன் சூழலில் ஏற்படும் மாறுதல் களுக்குத் (திருமணம், பெற் றோராதல், தொழில் மாற்றம், முதுமை முதலியன) தகவமை யலாம்; தனிப்பட்ட வளர்ச்சிக் கான தன் முழு உள்ளாற்றலை யும் அடையலாம். வாழ்நாள் கல்வியானது ஒருவரின் திட்ட மிட்ட கல்வி அனுபவங்கள், தற்செயல் படிப்பினைகள் ஆகிய இரண்டையுமே உள் ளடக்குகிறது.

## LITERACY
### படிப்பறிவு, எழுத்தறிவு

எழுதப்படிக்க முடியும் திறன். சில நேரங்களில் கணக் கிடும் திறனும் இக்கருத்தில் அடங்குகிறது. alphabetization, alphabetisation என்னும் தோராயங்கள் எழுதப்படிக்க முடியும் நிலையை விடவும் எழுதப்படிக்கக் கற்கும் நிகழ்ச் சிப் போக்கையே குறிக்கிறது என்பது கருதத்தக்கது.

## LITERACY CAMPAIGN
### அறிவொளி இயக்கம், எழுத்தறிவு இயக்கம்

ஒரு சமுதாயத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த வயதுவந் தோர் எண்ணிக்கையை அதி கரிக்க வடிவமைத்த பிரச்சாரம் – அறிவுரை – கற்பித்தல் ஆகிய செயல்களின் ஒருங் கிணைவு.

## LITERACY EDUCATION
### எழுத்தறிவுக் கல்வி

சமுதாயத்தில் மனிதர்கள் செயற்பட அணியமாக்கும் எழுத்து, படிப்பு, கணக்குத் திறன்களைக் கற்பித்தல் அல் லது கற்றுக் கொள்ளுதல்.

## LOCAL AUTHORITY ADULT EDUCATION
### வட்டார அதிகார வயது வந்தோர் கல்வி

ஐக்கிய இங்கிலாந்துச் சொல்

காண்க:
Public School Adult Education

**LONG TERM MEMORY**
**நீண்ட கால நினைவகம்**

நினைவு பற்றிய குறிப்பிட்ட செயற்பாடுகளின்படி மூளையின் இரண்டு செயற்பாடுகளில் இரண்டாவது. இதில் தான் நினைவில் வைத்தல் நடைபெறுகிறது. இந்தச் செயற்பாட்டில் ஒருவர் பெறும் தகவல் குறுகிய கால நினைவகத்தில் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்ட பிறகு நீண்டகாலம் நினைவில் தங்கவும் நினைவு கூரவும் வேண்டி ஒழுங்கமைக்கப்பட்டுச் சேமிக்கப்படுகிறது. நீண்டகால நினைவானது வயதால் குறையாது. இடையில் பயன்படுத்தாததால் மறையாது.

**LONG TERM RESIDENTIAL CENTRE**
**நீண்டகாலத் தங்கிட மையம்**

காண்க:
Long term residential college

**LONG TERM RESIDENTIAL COLLEGE**
**நீண்ட காலம் தங்கிப் படிக்கும் கல்லூரி**

ஒரு நீடித்த கால அளவுக்கு வயதுவந்தோர் சேர்ந்து வசித்துப் படிக்கும் நிறுவனம். இக்கால அளவு பல மாதங்களில் இருந்து ஓரிரு ஆண்டுகள் வரை வேறுபடலாம்.

---

# M

---

**MANAGEMENT EDUCATION**
**மேலாண்மைக் கல்வி**

மேலாண்மைப் பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான பான்மைகள், அறிவு, திறன் வடிவங்களின் முறைப்படியான மேம்பாடு.

**வேறுபெயர்**
Management Training

**MANAGEMENT TRAINING**
**மேலாண்மைப் பயிற்சி**

காண்க:
Management Education

**MARGINAL GROUP**
**விளிம்புநிலைக் குழு**

வயதுவந்தோர் கல்வியில், பொருள் ஆதாரக் குறைவால் கல்வி மற்றும் பிற நலன்களை அடைந்திராத ஒரு இலக்குக் குழுவை இந்த ஸ்பானியச் சொல் குறிக்கிறது.

**MATURE STUDENT**
**முதிர்ந்த மாணவர்**

உயர் அல்லது மேலுமான கல்வியில் முழுநேர மாணவராக இருப்பவரைக் குறிக்கிறது. இவர், தன் தொடக்கச் சுற்று முழுநேரப் படிப்பை முடித்துவிட்டு, தற்போது அவர் ஈடுபட்டிருக்கும் படிப்பை மேற்கொள்ளுமுன் வேறு ஒரு நடவடிக்கையில் சில ஆண்டுகள் செலவழித்திருக்கிறவர்.

**MENTAL SET**
**மன அமைப்பு**

1. வயது வந்தோர் கல்வியில், அனுபவத்தால் திரும்பத் திரும்ப உறுதிப்படுத்தப்படும் கருத்துக்கள், பான்மைகள் மற்றும் எண்ணப் போக்குகளில் இறுகிவிடும் நிகழ்முறை. இது வயதாவதுடன் தொடர்புடையது. வயதுவந்தோர் கல்வியில் ஒரு முக்கியக் காரணி.

2. வயதுவந்தோர் கல்வியில் ஒரு மாறாக் கருத்து, மனப்பான்மை, அல்லது எண்ணப் போக்கு. இத்தகைய அமைப்புக்கள் வயதுவந்தோர் கற்றுக் கொள்வதில் தடைகளாக அமைகின்றன.

**MENTAL TRAINING**
**மனப்பயிற்சி**

வயதுவந்தோர் தம் குறித்த தகைமைகளை (Cognitive aptitudes) வளர்க்கக் கற்பதற்காகப் பிரான்சில் விரிவுபடுத்தப்பட்ட பொதுமுறை. மனத்திறன்களைப் பயன்படுத்துவதில் முன்னேறிச் செல்லும் பயிற்சிகள் மூலம், தனியர்கள் நுண்ணறிவுத் தேர்ச்சி பெறச் செய்யப்படுகிறார்கள். அவர்களை எந்தச் சூழ்நிலையிலும் திறம்பட எதிர்வினை புரியக் கூடியவர்கள் ஆக்குவதே இதன் நோக்கம்.

## MIDCAREER CRISIS
**நடுத்தொழில் நெருக்கடி**

ஒருவரின் தொழில் வாழ்வின் நடு ஆண்டுகளில் ஏற்படும் நெருக்கடிக் கட்டம். இந்தக் கட்டத்தில் பணிஓய்வு பெறுவதற்கு மீதமுள்ள குறுகியகாலம் குறித்தும், தன் குறிக்கோள்களை அடையத் தேவைப்படும் விரைவு குறித்தும் ஒருவர் அதிகமதிகம் உணர வருகிறார். இந்நிலையில் தன் இலக்குகளையும் வருங்கால வாய்ப்புகள் குறித்த நம்பிக்கைகளையும் அவர் மாற்றிக்கொள்ளலாம். தொழில்/ வேலைகளை மாற்றலாம். வாழ்க்கைப் பாணியில் தீவிர மாறுதல்களைச் செய்யலாம்.

## MILITARY TRAINING
**போரியல் பயிற்சி**

ஒருவர் அல்லது ஆயுதப் படைகளின் ஓர் அலகு, தன் போரியல் செயற்பாட்டைத் திறம்பட நிகழ்த்தத் தேவைப்படும் பான்மை, அறிவு மற்றும் திறமைப் பாணிகளின் முறையான வளர்ச்சி.

# N

## NEEDS ASSESSMENT
**தேவை மதிப்பீடு**

குறிப்பிட்ட ஒரு குழு அல்லது சமுதாயத்தின் கல்வித் தேவைகளையும் கற்றல் மற்றும் சமூக இலக்குகளையும் தீர்மானிக்கும் திட்டமிட்ட முறை.

## NIGHT SCHOOL
**இரவுப் பள்ளி**

1. முழுநேரப் பள்ளி வாழ்வை இடைநிறுத்தி விட்டவர்களுக்காகப் பின்மாலை அல்லது இரவு நேரங்களில் ஒழுங்கான பாடம் நடத்தும் அரசு / தனியார் நிறுவனம்.

2. அரசின் தொடக்க, இடைநிலைப் பள்ளி வழங்கும் தொழில்சார், சாரா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உட்பட்ட வயதுவந்தோர் கல்வி.

**வேறு பெயர்**

Evening Institute

**NON - CREDIT**

**பயன் கருதா**

ஒரு பட்டம், பட்டயம், சான்றிதழ் அல்லது வேறு கல்வித் தகுதியை வழங்கும் படிப்பின் பகுதியாகக் கருதப்படாத/ஏற்கப்படாத ஒரு பாடத்திட்டம் / நிகழ்ச்சியைக் குறிக்கும் பெயரெச்சம்.

**NON - FORMAL EDUCATION**

**முறைசாராக் கல்வி**

காண்க:
Out-of-school education

பயில்வோர் பதிவுசெய்வது தேவைப்படாத கல்வி நிகழ்ச்சிகள் (யுனெஸ்கோ பன்னாட்டுத் தர வகைப்பாட்டுக் கல்வி)

**NON-JOINER**

**சேராதவர்**

காண்க: Non-participant

**NON-PARTICIPANT**

**பங்கேற்காதவர்**

வயதுவந்தோர் கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்காதவர்.

**வேறுபெயர்**

Non-joiner

**NON-PROFIT MAKING ORGANIZATION**

**ஆதாயம் நாடா அமைப்பு**

தன்னார்வு அமைப்பு போன்ற அமைப்பு. இதன் செலவுக்கு மேல் உபரியாகும் வருவாய் உறுப்பினர்கள்/பங்குதாரர்களுக்குப் பகிரப்படாமல் அமைப்பின் நோக்கங்கள் தொடரப் பயன்படுத்தப் படுகிறது.

**NON-TRADITIONAL STUDY**

**மரபு சாராப் படிப்பு**

கற்றலில் புதிய அரிதான – மரபல்லா அமைப்பியல் முறையியல் அணுகுமுறைகள். இவை பெரும்பாலான கல்வி அமைப்புகளின் தனித்தன்மையான இடம் – காலம் – பாட வரிசை மற்றும் / அல்லது தகுதிச் சட்டகத்துள் அடைபடாமல் கல்வியை நாடுவோரின் தேவைகளை நிறைவு செய்ய வடிவமைக்கப்பட்டவை.

# O

## OCCUPATIONAL TRAINING
**தொழிற் பயிற்சி**

காண்க: Vocational Training

## OFF-THE-JOB TRAINING
**பணியிடம் சாராப் பயிற்சி**

வழக்கமான வேலைச் சூழலில் இருந்து தள்ளி மேற் கொள்ளப்படும் தொழில்சார் பயிற்சி. மொத்தப் பயிற்சித் திட்டத்தில் வழக்கமாக இது ஒரு பகுதி மட்டுமே. மொத்தத் திட்டத்தில் இது பணியிடம் சார் பயிற்சியுடன் சேர்ந்திருக்கும்.

## ONE DAY SCHOOL
**ஒருநாள் பள்ளி**

ஒரு நாள் முழுதுமோ பகுதியோ கற்கவும் கற்பிக்கப் படவும் மாணவர்கள் ஒன்று சேர்க்கப்படும் கல்வி அமைப்பு. ஒரு நாள் பள்ளி யானது குறிப்பிட்ட தலைப்பை ஆழமாகக் கற்கும் தனியான கற்றல் அனுபவத்தைக் கொண்டதாய் இருக்கலாம். அல்லது ஒரு விரிவான பாடத் திட்டத்தில் பிற கற்றல் அனு பவங்களுடன் சேர்ந்திருக் கலாம்.

## ON THE JOB TRAINING
**பணியிடம்சார் பயிற்சி**

வழக்கமான பணிச்சூழலில் வழங்கப்படும் தொழிற் பயிற்சி. இதில் மொத்தப் பயிற்சியும் இருக்கலாம் அல் லது பணியிடம் சாராப் பயிற்சி அல்லது கல்வியுடன் சேர்ந்த பணியிடம் சாராப் பயிற்சியும் இருக்கலாம்.

## OPEN SCHOOL
**திறந்தவெளிப் பள்ளி**

உயர்நிலைக் கல்விக்குக் கீழே இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியை வயதுவந்தோர் பெற உருவாக் கப்பட்ட நிறுவனம். சேர்த்துக் கொள்ள எந்தக் கல்வித் தகுதி களும் கேட்கப்படுவதில்லை. கற்பித்தல் - அஞ்சல், வானொலி மற்றும் தொலைக் காட்சி மூலம் நடைபெறும் அல்லது ஆசிரியரும் மாணவர் களும் நேருக்கு நேர் சந்தித் துக் கொள்ளும் முறையிலும் நடைபெறும்.

**OPEN UNIVERSITY**

**திறந்தவெளிப் பல்கலைக்கழகம்**

ஐக்கிய இங்கிலாந்தில் உதித்த இந்தச் சொல், வயது வந்தோர் உயர்கல்வி பெற உருவாக்கப்பட்ட அமைப்பைக் குறிக்கிறது. முறையான கல்வித்தகுதிகள் பற்றிப் பொருட்படுத்தாமல் வயது வந்தோர் அனைவரும் இதில் சேரத் தகுதியானவர்கள். அஞ்சல், வானொலி மற்றும் தொலைக்காட்சி வழி கற்பித்தல் நடைபெறுகிறது. இத்துடன் சில நேருக்கு நேர் நிகழ்ச்சிகளும் வழிகாட்டுதல்களும் இருக்கலாம். பட்டங்களுக்கு இட்டுச்செல்லும் பயன்தரு படிப்புகளையும் பல்கலை வழங்குகிறது. பயன் கருதாப் படிப்புகள் சிலவும் வழங்கப்படுகின்றன.

**OPERATIONAL SEMINAR**

**செயல்முறைக் கருத்தரங்கு**

யுனெஸ்கோ சோதனை நிலை உலக எழுத்தறிவுத் திட்டத்தில் இருந்து எழுந்த் சொல். வயதுவந்தோர் கல்வித்திட்டங்களின் உருவாக்கம், நிறைவேற்றம், மதிப்பீடு ஆகிய அம்சங்களில் தேடல், ஆய்வு, புத்தாக்கத்துக்காகக் கூடும் ஒரு குழுவைக் குறிக்கிறது.

**ORGANISATIONAL DEVELOPMENT**

**அமைப்பு ரீதி வளர்ச்சி**

அமைப்பு ரீதியான மற்றும் தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்கு உறுப்பினர்களுக்குள்ள திறனை அதிகரிப்பதற்காக ஒரு அமைப்புக்குள் ஆன கட்டமைப்பு, செயற்பாடுகள், மற்றும் ஆளிடை உறவுகளில் வளர்ச்சி அல்லது மாற்றத்தைத் தூண்டவும் பேணவும் வகுக்கப்பட்ட தலையீட்டு நிகழ்முறைகளும் கற்றல் அனுபவங்களும்.

**OUT-OF-SCHOOL EDUCATION**

**பள்ளி சாராக் கல்வி**

முறையான பள்ளிக்கு வெளியில் நடத்தப்படும் அனைத்துக் கல்வியையும் தொழிற்கல்விப் பயிற்சி தவிர்த்த உயர்கல்வி

முறையையும் குறிக்கும் சொல்.

**வேறுபெயர்**
Non-formal Education

## OUTREACH
**சமூகப் பரவல்**

கல்வி மற்றும் சமூகப் பணிகள் கிடைப்பதையும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதையும் குறிப்பாகத் திட்டமிடப்பட்ட மக்களுடன் இடைவினை புரிதல் வழி நேரடியாகத் தலையிடல் மூலமாக அதிகரிக்க வகுக்கப்பட்ட நடைமுறை. சமூகப்பரவல் நிகழ்ச்சிகள் வழக்கமாகக் கல்வி மற்றும் சமூக ரீதியில் வகையற்ற குழுக்களை இலக்காகக் கொண்டுள்ளன.

# P

## PAID EDUCATIONAL LEAVE
**ஊதியத்துடன் கல்வி விடுப்பு**

ஒரு கல்வி அல்லது பயிற்சி பெறுவதற்காக ஒருவருக்கு ஊதிய இழப்பின்றி அளிக்கப் படும் விடுப்பு.

**வேறுபெயர்**
Sabbatical Leave

## PARENT EDUCATION
**பெற்றோர் கல்வி**

குழந்தை வளர்ப்பு, குடும்ப உறவுகள், குடும்பத்திலும் சமூகத்திலும் பெற்றோராக ஆற்ற வேண்டிய பங்கு இவற்றுக்குத் தேவையான அறிவு, பான்மைகள், திறன்களின் முறைப்படியான வளர்ச்சி.

## PARTICIPATORY METHOD
**பங்கேற்பு முறை**

மாணவரின் தீவிரப் பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கமுடைய ஒரு கற்றல் சூழலில் பயன்படும் நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளின் தொகுதியைக் குறிக்கும் சொல். இந்த முறையைப் பயன்படுத்துவதில் ஆசிரியரின் பங்கு, கற்றல் நிகழ்முறையை எளிதாக்குவது மட்டுமே மாணவரே இதில் தீவிரப் பங்கேற்கிறார் எனக் கொள்ளப்படுகிறது.

**PART-TIME STUDY**

**பகுதிநேரப் படிப்பு**

வேலைவாய்ப்பு, ஓய்வு, கல்வி இவற்றைக் கலக்கும் பல்வேறு வழிகளில் ஒன்றைத் தேர்வதுடன் தொடர்புடைய கற்றல். முழுநேர அடிப்படையில் ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து பயிலாத மாணவர்கள் ஈடுபடும் கல்வியைக் குறிக்கும் ஆட்சிச்சொல்.

**PERSON CENTERED LEARNING**

**ஆள்மையக் கல்வி**

காண்க:

Learner Based Education

**PLACEMENT**

**அமர்த்தீடு**

ஒரு தொழில் சூழ்நிலையில் நீட்டிக்கப்படும் காலத்துக்கு மேற்பார்வையிடப்படும் நடைமுறை. பயிற்சியில் இருக்கும் ஒரு Pardon ஆல் முறைக்குட்படுத்தப்படுகிறது. கோட்பாட்டு அறிவை நடைமுறைத் திறன்களுடன் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் ஒருங்கிணைக்க வாய்ப்புகள் வழங்கும் முறையில் அமர்த்தீடுகள் திட்டமிடப்படுகின்றன.

**வேறு பெயர்கள்**

Internship

Pracitcum

**POPULATION EDUCATION**

**மக்கள்தொகைக் கல்வி**

மக்கள்தொகை இயல் சிக்கல்களைப் புரிதலையும் அவற்றில் இருந்து எழும் சிக்கல்களைத் தீர்க்கும் திறனையும் அதிகரிக்கும் நோக்கமுள்ள கல்வி. குறிப்பாக இது மக்கள்தொகை வளர்ச்சியின் இடைவினையுடனும் சமூக – பொருளியல் நிலைமைகளின் கட்டுப்பாட்டுடனும் தொடர்புடையது.

**POST-COMPULSORY EDUCATION**

**கட்டாயக் கல்விக்குப் பிந்திய கல்வி**

கட்டாய பள்ளி வருகைக் காலத்துக்குப் பின் தொடரும் தொடக்கத்தில் முழுநேர இடைநிலைக் கல்விக்காலம்.

**POST-EXPERIENCE EDUCATION**

**அனுபவத்துக்குப் பிந்திய கல்வி**

ஏற்கனவே முழுநேர வேலை அனுபவம் கொண்ட (இதில் குடும்பத்தலைவி என்ற வேலையும் அடங்கும்) ஒருவர் மேற்கொள்ளும்/அவருக்கு வழங்கப்படும் கல்வி. இக் கல்வி, பயில்பவரின் தொழில் அனுபவத்துக்குப் பொருத்த மாயிருக்கத் தேவையில்லை (ஆனாலும் பெரிதும் அது அப்படியே இருக்கிறது).

**வேறு பெயர்**

Post - Experience Training

**POST - EXPERIENCE TRAINING**

**அனுபவத்துக்குப் பிந்திய பயிற்சி**

*காண்க:*
Post - Experience Education

**POST - SECONDARY EDUCATION**

**இடைநிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி**

1. இடைநிலைக் கல்வி முடித்தபின் மேற்கொள்ளப் படும் அனைத்துக் கற்றல் நட வடிக்கைகளும், வயதுவந் தோர் அடிப்படைக் கல்வியை யும் இடைநிலைப் பாடத் திட்டத்திலான கல்வியையும் தவிர.

2. உயர்நிலைக் கல்விக்கு இன்னொரு பெயர்.

**PRACTICUM**

*காண்க:* Placement

**PRE-RETIREMENT EDUCATION**

**பணி ஓய்வுக்கு முந்திய கல்வி**

*காண்க :* Retirement education

**PROFESSIONAL DEVELOPMENT**

**தொழின்முறை வளர்ச்சி**

தனிப்பட்ட, தனிப்பட்டோ ரிடையிலான நிர்வாக, தொழில்முறையான மற்றும் மேலாண்மைசார் செயல்நிறை வேற்ற ஊழியரின் திறமையை அதிகரிப்பதற்கும் சமுதாயத் தில் நிலவும் சமூக – அரசியல் – பொருளியல் சக்திகள் பற் றிய விழிப்புணர்வை ஆழப்

படுத்தவும் வகுக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகள்.

**PROFESSIONAL TRAINING**

**தொழில்முறைப் பயிற்சி**

பொதுவான தொழில் தேவைகளுக்கோ உயர்தரத் தொழில்துறை வணிகப் பணிகளுக்கோ ஆன பயிற்சி. எனவே இதன் பொருள் பிரெஞ்சு உருவாக்கமான Professionalleஐ விடவும் (இதன் பொருள் தொழில்சார் பயிற்சி) குறுகியதே.

**PROGRAMME PLANNING**

**நிகழ்ச்சித் திட்டமிடல்**

ஒருவர் தனியாகவோ குழுவாகவோ, ஒரு சூழ்நிலையைப் பகுத்தாய்ந்து அடைய வேண்டிய கல்வி இலக்குகளை அடையாளம் கண்டு தேடும் நிகழ்முறைகள்.

**PROMOTION COLLECTIVE**

**கூட்டு முன்னேற்றம்**

வேலை நிலைமைகளை முன்னேற்றவும் ஒரு சமூக – பொருளியல் குழு வகுப்பின் சூழ்நிலையையும் தரத்தையும் மேம்படுத்தவும் குறியாய் உள்ள நடவடிக்கைகளின் தொகுப்பைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல். முதன்மையாக, நகர அல்லது ஊரக உழைக்கும் வகுப்புக்குள் ஆன நடவடிக்கைகளைக் குறிக் கப் பயன்படுகிறது.

**PROMOTION INDIVIDUELLE**

**தனி முன்னேற்றம்**

ஒரு குழு/வகுப்பின் முன்னேற்றத்தைவிட தனி ஒரு பயில்பவரின் வளர்ச்சியை முதன்மை நோக்கமாய்க் கொள்ளும் கல்வி நடவடிக்கைகளைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல்.

**PSYCHOLOGY OF ADULT EDUCATION**

**வயதுவந்தோர் கல்வி உளவியல்**

வயதுவந்தோர் கல்வியையும் கல்வி அனுபவங்களில் பங்கேற்றலையும் பாதிக்கும் உளவியல் காரணிகள்; இந்தக் காரணிகளின் குறிப்பாக வயதுவந்தோரின் வாழ்க்கைக்குப்

பொருந்தியவற்றின் செயல் முறை பற்றிய ஆய்வு.

## PUBLIC AFFAIRS EDUCATION

**பொது அலுவல் கல்வி**

காண்க: Citizenship Education

## PUBLIC SCHOOL ADULT EDUCATION

**அரசுப் பள்ளி வயதுவந்தோர் கல்வி**

தொடக்க மற்றும் இடைநிலை அரசுப் பள்ளிகளில் வயது வந்தோருக்காக நடைபெறும் கல்வி நடவடிக்கைகளைக் குறிக்க ஐக்கிய அமெரிக்காவில் பயன்படுத்தும் சொல். இந்நடவடிக்கைகளைப் பள்ளிகளுக்குப் பொறுப்பான அரசு அலுவலர்கள் வழங்குகிறார்கள்.

# R

## RADIO FORUM

**வானொலி அரங்கம்**

வானொலி நிகழ்ச்சியால் தொடங்கப்படும் குழு விவாதத்தைக் குறிக்கும் ஸ்பானிய சொல்.

## RADIO SCHOOLS SYSTEM

**வானொலிப் பள்ளி முறை**

ஒரு இலத்தீன் அமெரிக்க ஸ்பானியச் சொல். ஒரு பொதுவான அமைப்பின் இயக்குதலின்கீழ் இயங்கும் வானொலிப் பள்ளிகளின் வலைப்பின்னலைக் குறிக்கிறது.

## RECURRENT EDUCATION

**விட்டுவிட்டுத் தொடரும் கல்வி**

வாழ்நாள் கல்வி அமைப்பு. முறையான கல்விக் கட்டங்கள் இடையிடையே வேலை அல்லது ஓய்வு போன்ற வேறு நடவடிக்கைகளின் நீடித்த கட்டங்களுடன் மாறிமாறித் தொடரும்.

## REFRESHER EDUCATION

**புத்தகக் கல்வி**

பயன்படுத்தாமையால் சீர் கெட்டுப்போன ஏற்கனவே கற்ற பான்மைகள், அறிவு மற்றும் திறன் பணிகளைத் திருத்தவும் புதுக்கவும் ஆன நடவடிக்கைகள். இயல்பாகவே

இதில் நிகழுக்கு கொணரும் ஒரு கூறும் அடங்குகிறது.

**வேறு பெயர்**
Refresher Training

**REFRESHER TRAINING**
**புத்தாக்கப் பயிற்சி**
காண்க: Refresher Education

**RESIDENT TUTOR**
**தங்கிடப் பயிற்றுநர்**

வயது வந்தோருக்காகப் பெரிதும் விரிவாக்கப் பணி செய்யும் முழுநேரப் பயிற்று நர். தன் கல்வி நிறுவனத்தில் இருந்து குறிப்பிட்ட தொலை வில் இருக்கும் ஒரு பகுதியில் தன் நிறுவனத்தின் சார்பாக வயதுவந்தோர் படிப்புகளை ஊக்குவிக்கும் – நிருவகிக்கும் – சிலருக்குப் படிப்பிக்கும் பொறுப்புடையவர். தனக்குப் பொறுப்புடைய பகுதி யிலேயே அவர் தங்கிச் செயற் பட வேண்டும்.

**RESIDENTIAL ADULT CENTRE**
**வயதுவந்தோர் தங்கிப் பயிலும் மையம்**

காண்க:
Residential Adult College

**RESIDENTIAL ADULT COLLEGE**
**வயதுவந்தோர் தங்கிப் பயிலும் கல்லூரி**

ஒரு ஒருங்கிணைந்த கல்வி அனுபவமாக வயதுவந்தோர் ஒன்றாகத் தங்கிப் பயிலும் நிறு வனம்.

**வேறுபெயர்:**
Residential center

**RESIDENTIAL ADULT EDUCATION**
**வயதுவந்தோர் தங்கி பயிலும் கல்வி**

பங்கேற்போர் ஒரு சமுதாய மாக ஒன்றாக வாழ்ந்து பயி லும் வயதுவந்தோர் கல்வி. ஒன்று கூடி வாழ்வது கல்வி அனுபவத்தின் – நோக்கத்தின் ஒரு பகுதியாகும்.

**RESIDENTIAL SCHOOL**
**தங்கிப் பயிலும் பள்ளி**

குறுகிய கால அளவிலான படிப்பு. இதில் பங்கேற்போர் ஒரு சமுதாயமாகச் சேர்ந்து

வாழ்ந்தபடி கற்கிறார்கள். பிரெஞ்சு அரங்கம், தங்கிச் செல்வதாயிருக்கத் தேவையில்லை; அது முழு நேரமானது.

## RETIREMENT EDUCATION

**பணி ஓய்வுக் கல்வி**

பணி ஓய்வு பெற உள்ளோர் அல்லது அண்மையில்தான் ஓய்வு பெற்றுள்ளோருக்கான கல்வி. வேலையிலிருந்து ஓய்வு பெற்றதால் தம் வாழ்வில் நேர்ந்துள்ள மாறுதல்களைச் சமாளிக்க அவர்களுக்கு வலிமை தரும் நோக்கமுடையது. பாடத் தலைப்புகளில் இயற்பியல், சமூக உளவியல் மற்றும் நிதிச் சிக்கல்கள் அடங்குகின்றன. தம் நேரத்துக்கேற்ப நலமான, நிறைவளிக்கிற, இனியும் சமுதாயத்தில் தான் ஒரு பயனுள்ள பங்கை ஆற்ற முடியும் என அவர்கள் உணரும்படிச் செய்கிற வேலைகளைக் கண்டு கொள்ள அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்; உதவியும் செய்யப்படுகிறார்கள்.

## RETRAINING

**மறுபயிற்சி**

இதுவரை ஒருவர் இருந்த பணியிலிருந்து மாறுபட்ட பணிக்குத் தேவையான புதிய அறிவு, பான்மைகள் மற்றும் திறன் பாணிகளை அடைந்து கொள்வதற்கான பயிற்சி.

## RETRAINING ALLOWANCE

**மறுபயிற்சிப் படி**

புதிய வேலைப் பொறுப்புக்கான பயிற்சி பெறும் ஒருவருக்கு ஏற்படும் ஊதிய இழப்பை ஈடு செய்யும் பண உதவி.

## ROLE EDUCATION

**பாத்திரக் கல்வி**

ஒருவர் சமூகத்தில் ஒரு பாத்திரத்தை ஆற்ற அவரைத் தயார்ப்படுத்த வகுக்கப்பட்ட கல்வி. (எ.கா: ஒரு பெற்றோர், குடிமகன், தொழிற்சங்கர் பாத்திரம்). தொழில்சார் செயற்பாட்டுக்கான கல்விக்கு இச்சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

**ROLE PLAYING**

**பாத்திரமாற்றல்**

மாணவர்கள் முன் ஒரு சூழ்நிலை அல்லது சிக்கல் வைக்கப்பட்டு அந்தச் சூழ்நிலைக்குத் தக்க பாத்திரமேற்பதன் மூலம் அதனை அவர்கள் தீர்க்கும்படிக் கோரும் கற்பித்தல் உத்தி.

**RURAL COMMUNITY CENTRE**

**ஊரகச் சமுதாய மையம்**

ஒரு கிராம / ஊரகப் பகுதியின் சமூக – பண்பாட்டு நடவடிக்கைகளுக்கான மையமாக இயங்கும் நிறுவனம்.

**RURAL EXTENSION**

**ஊரக விரிவாக்கம்**

ஊரகப் பகுதிகளில் விரிவாக்கக் கல்வி.

---

# S

---

**SABBATICAL LEAVE**

**கல்வியாளர் விடுப்பு**

குறிப்பிட்ட ஆண்டுக்கால ஊழியத்துக்குப் பின் ஊழியர்களுக்கு வழக்கமாகக் கல்வி / ஆய்வு நோக்கங்களுக்காக முழு ஊதியத்துடனோ பகுதி ஊதியத்துடனோ வழங்கப்படும் விடுப்பு. முன்பு இது முற்றிலும் உயர் கல்வியிலேயே பயன்படுத்தப்பட்டது. இப்போது அதிகமதிகம் பிற கல்விப் பரப்புகளிலும் தொழில் துறையிலும் வாணிகத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

**வேறுபெயர்**

Paid Educational Leave

**SANDWICH COURSE**

**இடையீட்டுப் படிப்பு/ பயிற்சி**

முழுநேரக் கற்பித்தல் கட்டங்களும், அவற்றோடு தொடர்புடைய முழுநேரத் தொழில்துறை, வாழ்க்கைத் தொழில் அல்லது வணிக அனுபவங்களும் மாறிமாறி வரும் படிப்பு.

**வேறுபெயர்**

Work Study Programme

**SCHOOL BOARD ADULT EDUCATION**

**பள்ளிவாரிய வயதுவந்தோர் கல்வி**

காண்க:
Public School Adult Education

## SECOND CHANCE EDUCATION
### மறுகல்வி வாய்ப்பு

குழந்தைப் பருவத்தில் தொடங்கிய தொடர் கல்வி சுற்றின்போது இயல்பாக வாய்த்திருந்த கல்வியை அதே தரத்தில் வயது வந்தோர் பெற வாய்ப்பு வழங்கும் படிப்பு வாய்ப்புகள். அவற்றில் உள்ளடங்குபவை எழுத்தறிவுப் பயிற்சி; உயர்படிப்புக்கு முன் தேவையாகும் பொதுக் கல்விச் சான்றிதழ்களுக்கு வழி செய்யும் போதனை; உயர் கல்வி, ஊதியம்பெறும் வேலைவாய்ப்பில் புகுமுன் வழக்கமாக மேற்கொள்ளப் படும் விதமான தொழில்சார் பயிற்சி.

## SELF-ACTUALIZATION
### தன் நிறைவேற்றம்

தன் திறன்களையும் திறமைகளையும் வளர்ப்பதற்கும், தன்னைப் புரிந்து ஏற்பதற்கும், தன் உள்நோக்கங்களை இசைவுள்ளதாக்கவும் ஒருங்கிணைக்கவும் கூடிய நிகழ்முறைகளைக் குறிக்கப் பயன்படும் சொல். இந்த நிகழ்முறையில் இருந்து விளையும் நிலையையும் அது குறிக்கலாம்.

## SELF-DIRECTED LEARNER
### தன்வழிப் பயில்வோர்

தன் கல்வித் திட்டங்களைத் திட்டமிடும் – நடத்தும் – மதிப்பிடும் முதன்மைப் பொறுப்பைத் தானே தொடங்கும் – ஏற்கும் ஒரு பயில்வோர். தானாகக் கற்பவரைப் போலன்றித் தன்வழியில் பயில்பவர். ஆசிரியர்கள், நண்பர்கள் போன்ற பிறர் உதவியை பெற்றுக் கொள்ளலாம் அல்லது வகுப்பு போன்ற ஒரு படிப்புக் குழுவில் பங்கேற்கலாம்.

## SELF-DIRECTED LEARNING
### தன்வழிப் படிப்பு

ஒருவர் / குழு தன் சொந்தக் கல்வித் திட்டங்களைத் திட்டமிடும் – நடத்தும் – மதிப்பிடும் முதன்மைப் பொறுப்பைத்

தானே முன்னெடுக்கும் நிகழ்முறை. தானாகக் கற்றலைப் போலன்றி, வழக்கமாக இது ஆசிரியர்கள் அல்லது நண்பர்கள் அல்லது ஒரு நிறுவனத்தின் உதவியுடனேயே நடைபெறுகிறது.

## SELF-EDUCATION
**தற்கல்வி**

காண்க: Independent Learning

## SELF-INSTRUCTION
**தற்போதனை**

காண்க: Independent Learning

## SELF-LEARNER
**தற்படிப்பாளர்**

காண்க: Independent Learner

## SELF-PACED LEARNING
**தன்வேகப் படிப்பு**

பயில்பவரின் சொந்த வேகத்தில் முன்னேறும் கற்றல் செயற்பாடு. தானாகக் கற்றல் பெரும்பாலான வாசிப்பு போலவே தன் வேகமுள்ளது தான்.

## SEMINARIO DE ARRANQUE
**பணிப்பட்டறைத் திட்டக்குழு**

வயது வந்தோருக்கான அடிப்படைக் கல்வித்திட்டம் வழி எழுத்தறிவை வழங்கும் திட்டத்தை வடிவமைத்து நிறைவேற்றுவதற்கான ஒரு குழுவைத் தன்னுள் கொண்ட ஒரு பட்டறையைக் குறிக்கும் ஸ்பானியச் சொல். இக்குழு பொருந்திய தகவலை விவாதிக்கிறது. திட்ட வடிவமைப்புக்குத் தேவையான தரவுகளைச் சேகரிக்கிறது.

## SENSITIVITY TRAINING
**நுண்ணுணர்வுப் பயிற்சி**

மனிதர்களுக்கு அவர்களின் சொந்த இயல்புகளைக் குறித்தும் மற்ற மனிதர்களுடன் அவர்கள் கொள்ளும் உறவுகளைக் குறித்துமான அவர்களின் உணர்வை ஆழப்படுத்த நடத்தப்படும் நடவடிக்கை. இப்பயிற்சி பொதுவாக, சிறு குழப்பங்களுக்கு நடத்தப்படுகிறது. குழுவின் உறுப்பினர்கள் ஒரே நேரத்திலும் விட்டு விட்டும் தமக்

கிடையே வினைபுரிந்து பின் அந்த இடைவினையைப் பரிசீலிக்கிறார்கள்.

**SERVICE EDUCATION**

**படைத்துறைக் கல்வி**

காண்க:

Armed Forces Education

**SHORT TERM MEMORY**

**குறுகிய கால நினைவகம்**

மனிதக் கற்றலின் சில நிகழ்வுகளை விளக்கும் சில கற்றல் கோட்பாடுகளில் நினைவில் வைப்பது மூளையில் இரு செயற்பாடுகளால் செய்யப்படுகிறது என எடுத்துக் கொள்ளப்படுகிறது. முதல் குறுகிய கால நினைவு என்பது ஒருவர் பெறும் தகவல் நீண்ட காலம் தங்கியிருப்பதற்காக ஒழுங்கமைப்படுவதற்கு முன்பாகத் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படும் செயற்படாகும். குறுகிய கால நினைவு, வயது ஏற ஏற குறைவதாகத் தோன்றுகிறது.

**வேறுபெயர்**

Immediate Memory

**SHORT TERM RESIDENTIAL CENTRE**

**குறுகிய காலம் தங்கிப் படிப்பதற்கான மையம்**

காண்க:

Short Term Residential College

**SHORT TERM RESIDENTIAL COLLEGE**

**குறுகிய காலம் தங்கிக் கற்பதற்கான கல்லூரி**

குறுகிய காலத்துக்கு வழக்கமாக ஒரு வாரக் கடைசியிலிருந்து ஓரிரு வாரம்வரை வயதுவந்தோர் சேர்ந்து வசித்துக் கற்பதற்கான நிறுவனம்.

**வேறுபெயர்**

Short Term Residential Center

**SIMULATED TRAINING**

**மீட்டுருவாக்கப் பயிற்சி**

காண்க: Simulation

**SIMULATION**

**பகர்ப்பு, மீட்டுருவாக்கம்**

1. வேலைச் சூழ்நிலைக்கு வெளியே தரப்படும் பயிற்சி,

வேலைச் சூழ்நிலைகளை மீட்டுருவாக்கம் செய்து அதில் தேவைப்படும் திறன்களில் பயிற்சி தருகிறது.

2. பயிற்சி நோக்கங்களுக்காக வேலை நிலையையும் திறமைகளையும் பகர்ப்பு செய்தல் அல்லது போலச் செய்தல்.

**வேறுபெயர்கள்**

Simulation Training
Simulated Training

## SIMULATION TRAINING
**மீட்டுருவாக்கப் பயிற்சி**

காண்க: Simulation

## SIMULATOR
**பகர்ப்பி**

பயிற்சியாளருக்கு, உண்மை நிலைமைகளின் சில பகுதி களை எடுத்துக்காட்டாக முன்வைக்கும் செயற்பாட்டு நிலைகளைத் திரும்ப உருவாக்கும் – இதன் மூலம் வேலையிலேயே நடக்க வாய்ப்பற்ற குறிப்பான அனுபவத்தைப் பயிற்சிச் சூழ்நிலைகளில் நடைமுறையில் பயிற்சியாளர் அனுபவிக்கச் செய்யும் உத்தி.

## SOCIAL ADVANCEMENT
**சமூக முன்னேற்றம்**

ஒருவரின் / குழுவின் வாழ்க்கை மற்றும் பணியின் தரத்தை உயர்த்தும் நிலைமைகளை – முன்னேற்றும் நிகழ்முறையைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல். இன்னும் சிறப்பாகத் தொழிலாளரின் சமூக நிலையை முன்னேற்ற முனையும் தொழிலாளர் கல்வியைக் குறிக்கிறது. எந்தக் கல்வியும் அது தொழில் சார்ந்ததாயினும் அல்லவாயினும் இந்தக் குறிக்கோளை அடைவதற்கே பங்களிக்க வேண்டும்.

## SOCIO-CULTURAL
**சமூக - பண்பாட்டு**

கல்விச் செயற்பாட்டுக்கும் பண்பாட்டுச் செயற்பாட்டுக்கும் சமூக வாழ்வின் அமைவுக்கும் ஒரு உறவைக் குறிக்கும் பிரெஞ்சுப் பெயரெச்சம். சமூக – கல்வியியல் என்பதற்குப் பெரிதும் ஒத்த சொல்லானாலும், கறாரான கல்வியியல் பொருளில் அதிகமில்லாமல் இன்னும் விரிந்த பொருளில் பயன்படுகிறது. ஒரு திரை அரங்கு அல்லது பொதுப்

பூங்கா ஆகியன சமூக – கல்வியியல் வசதிகள் என்பதைவிடச் சமூகப் பண்பாட்டு வசதிகளே ஆகும்.

காண்க:

Socio Educational

## SOCIO-EDUCATIONAL

**சமூகக் கல்வியியல்**

கல்விச் செயற்பாட்டுக்கும் அமைப்புக்கும் சாமானிய வாழ்வின் கட்டமைப்புகளுக் கும் இடையிலான உறவைக் குறிக்கும் பிரெஞ்சுப் பெயர் எச்சம். பெரிதும் சமூக – பண் பாட்டு என்பதுடன் ஒத்தது; குறு கிய – அதிகக் கறாரான கல்விப் பொருளிலும் கையாளப்படு கிறது. காட்டாக, பள்ளிகளும் இளைஞர் மையங்களும் சமூக – கல்வி வசதிகளும் திரை அரங்குகளும் பொதுப் பூங் காக்களும் சமூகப் பண்பாட்டு வசதிகள் என்பதே மிகவும் பொருத்தமானது.

காண்க:

Socil Cultural

## SOCIOLOGY OF ADULT EDUCATION

**வயதுவந்தோர் கல்வியின் சமூகவியல்**

வயதுவந்தோர் கல்வியை யும் கல்வி அனுபவங்களில் பங்கேற்பதையும் பாதிக்கும் சமூகவியல் காரணிகள்; இந்தக் காரணிகளின் செயற் பாடு பற்றிய ஆய்வு. குறிப்பாக வயதுவந்தோர் வாழ்க்கைக் குப் பொருந்துவன.

## SPECIAL DEGREE PROGRAMME

**சிறப்புப் பட்டச் செயல்திட்டம்**

ஏற்கனவே பெற்றுள்ள பல்கலை / கல்லூரி விருது களைவிட் முன்னாள் ஏட்டுக் கல்வி, வாழ்க்கை அனுபவம் அல்லது தானாகக் கற்றது என் பதன் அடிப்படையில் சேர்க்கப் பட்ட வயதுவந்த மாணவர் களின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றப்படும் பல்கலை / கல்லூரிச் செயல்திட்டம்.

**STAFF DEVELOPMENT OFFICER**

**ஊழியர் மேம்பாட்டு அலுவலர்**

காண்க: Training Officer

**STUDY CENTRE**

**படிப்பு மையம்**

தொலைநிலைக் கல்வியில் சேர்ந்திருப்போர் குறித்த காலங்களில் முறையாக ஆலோசனை பெறவும் நேருக்கு நேரான போதனை பெறவும் செய்முறைப் பயிற்சி களில் பங்குபெறவும் சந்திக் கும்படியான நிறுவனம். முன் னேற உதவும் மையம் போல் (Center de promotion) படிப்பு மையம் தொழில்சார் படிப்பு களுடன் நின்று கொள்வ தில்லை.

**STUDY CIRCLE**

**படிப்பு வட்டம்**

ஒரு பாடம் அல்லது சிக்கலைக் கூடிப்படிக்க / ஆய ஒழுங்காகக் கூடுவோரின் குழு. படிப்பு வட்டத்தில் அந்தப் பாடம் சிக்கலில் சிறப்பறிவு பெற்ற ஆசிரியர் இருக்க மாட்டார். மாறாக, குழுத் தலைமை உத்திகளில் பயிற்சி பெற்ற ஒரு தலைவர் இருக்கலாம்.

**வேறு பெயர்**

Study Group

**STUDY GROUP**

**படிப்பு குழு**

காண்க: Study Circle

**STUDY TOUR**

**கல்வி உலா**

நேரடி ஆய்வுக்காக ஆங் காங்கு நிறுத்தி மேற்செல்லும் பயணம் கலை, கட்டடக்கலை மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு களில் அதிகம் பயன்படுகிறது. உழவு, தொழில், நிருவாகப் பணிகளை நேரில் காட்டி விளக்கவும் கல்வி உலாக்கள் பயன்படுகின்றன.

**SUMMER SCHOOL**

**கோடைப் பள்ளி**

குறுகிய காலம் தங்கிப் படிக்கும் படிப்பு அல்லது குறுகிய காலப் பாடத்திட்டம். இதன் காலம் ஒரு வாரம் முதல் பல வாரங்கள் வரை மாறுபட லாம். வயதுவந்தோர் தம் வேலையிலிருந்து விடுபட்

டிருக்கும் ஆண்டு விடுமுறையின்போது அவர்கள் பங்கேற்க வசதியாகக் கோடை மாதங்களில் இது நடத்தப்படுகிறது.

## SUPERVISORY TRAINING

### மேற்பார்வைப் பயிற்சி

மேற்பார்வை அறிவு, பான்மைகள் .மற்றும் திறன்களின் முறைப்படியான வளர்ச்சி. வேலை மற்றும் பணி உத்தரவு, பின்னூட்டம், அறிவுரை கூறல் மற்றும் தலைமையின் மேம்பாடு ஆகியனவும் இதில் அடங்கும்.

# T

## TARGET COMMUNITY

### இலக்குச் சமுதாயம்

எழுத்தறிவு அல்லது வயது வந்தோருக்கான அடிப்படைக் கல்வித் திட்டத்தால் பயன் பெறும் உள்ளாற்றல் கொண்டதும் ஏற்கனவே தொழில்நுட்ப உதவி பெற்று வருவதுமான ஒரு சமுதாயத்தைக் குறிக்கும் இலத்தீன் அமெரிக்கச் சொல்.

## TEACHABLE MOMENT

### கற்பிக்கத்தக்க நேரம்

ஒருவர் கற்றுக்கொள்ளவோ கற்பிக்கப்படவோ குறிப்பாக அணியமாக இருக்கும் வாழ்க்கைக் காலகட்டங்கள். அவை நிகழும் நேரங்கள் ஒருவரின் வளர்ச்சி, குடும்பம், சமூகம் அல்லது வேலைச் சூழ்நிலையால் பாதிக்கப் பெறுகின்றன. இந்த நேரங்களில் கற்கத் தயாராயிருக்கும் நிலை என்பது பொத்தாம் பொதுவானதே. ஆனால் வழக்கமாக அந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமான அறிவு மற்றும் திறன்களை நோக்கி அது செலுத்தப்படுகிறது. காட்டாக, ஒருவருக்கு முதல் குழந்தை பிறப்பதற்கு உடனடியான முன்பின் காலகட்டங்கள் குழந்தை வளர்ப்பு பற்றிய அறிவைக் கற்பிக்கத் தக்க நேரமாக அமைகிறது. அதிக அளவு பயன் கிட்ட வேண்டுமானால் கல்வியானது கற்பிக்கத்தக்க நேரங்களில் நடைபெறும்படி ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என வாதிடப்படுகிறது.

**T-GROUP**
**T-குழு**
**Training Group**

பயிற்சிக் குழு (5 முதல் 15 பேர் கொண்ட) – சிறு குழு. தன் உறுப்பினர்கள் கற்பதற்கு ஒரு மையக்குழுவாக அமைகிறது. இவை ஒன்றுடன் ஒன்று இடைவினை புரிகின்றன. மற்றும் அல்லது பயிற்சி வேலைகளைச் சேர்ந்து மேற்கொள்கின்றன. இதனால் தம் பொது அனுபவங்களை அவை பகுத்தாய முடியும் – அதன்மூலம் தம்மைப் பற்றிய அறிவையும், மற்றவர்கள் குறித்த நுண்ணுணர்வையும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

**வேறுபெயர்**
Training Laboratory

**TRADE TRAINING CENTRE**
**வணிகப் பயிற்சி மையம்**

உடல் உழைப்பு வேலைகளுக்கான அடிப்படைத் தகுதிகள் பெற இட்டுச்செல்லும் செறிவான பாடங்கள் வழங்கும் நிறுவனத்தைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல்.

**TRADE UNION EDUCATION**
**தொழிற்சங்கக் கல்வி**

ஒருவர் தொழிற்சங்க உறுப்பினர் என்ற தன் பாத்திரத்தைத் திறம்பட நிறைவேற்றத் தேவையான பான்மைகள், அறிவு மற்றும் திறன் பாணிகளின் முறையான வளர்ச்சி.

**வேறு பெயர்கள்**
Labour Training
Trade Union Training

**TRADE UNION TRAINING**
**தொழிற்சங்க பயிற்சி**
*காண்க:* Trade Union Education

**TRAINEE**
**பயிற்சி பெறுபவர்**
*காண்க:* Adult Trainee

**TRAINER**
**பயிற்சி தருபவர்**

குறிப்பிட்ட கலை / பணியில் உடனடி முன்னேற்றத்தை விளைக்கும் திறன்களின் நடைமுறையை நெறிப்படுத்துபவர். வழக்கமாக T- குழுக்

களின் தலைவராகப் பயன் படுகிறார் மற்றும் தொழில் துறை மற்றும் மேலாண்மைக் கல்வியில் பயிற்றுநராகப் பயன்படுகிறார்.

**TRAINING**
**பயிற்சி**

ஒரு குறிப்பிட்ட பணியைத் தக்கமுறையில் நிறைவேற்ற ஒருவருக்குத் தேவையான பான்மைகள், அறிவு மற்றும் திறன் பாணிகளை முறையாக வளர்த்தல்.

**TRAINING AGREEMENT**
**பயிற்சி ஒப்பந்தம்**

தொழில்சார் கல்வியில் ஒரு ஒருங்கிணைந்த கோட்பாட்டை நிறுவ, வேலை தருவோருக் கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் முடிவாகும் ஒப்பந் தத்தை குறிக்கும் பிரெஞ்சு சொல்.

**TRAINING INSURANCE FUND**
**பயிற்சிக் காப்பீட்டு நிதி**

நிதி செலுத்தும் குழுமங் களில் வேலை செய்வோரின் பயிற்சித் தேவைகளுக்கு உதவும்படியாகப் பணத்தை வசூலிக்கவும் பயன்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ள அமைப்புகளைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல்.

**TRAINING LABORATORY**
**பயிற்சிச் சாலை**
காண்க: T-Group

**TRAINING LEVY**
**பயிற்சி வரிவிதிப்பு**
காண்க: Training tax

**TRAINING OFFICER**
**பயிற்சி அலுவலர்**

ஒரு தொழிற்சாலை, வணிக அல்லது நிருவாக அமைப்பில் மேலாண்மைத் தகுதியில் உள்ள ஊழியர். அமைப்பின் வேலைப் பயிற்சி நடவடிக்கை களுக்குப் பொறுப்பானவர்.

**வேறுபெயர்கள்**
Education Officer
Staff Development Officer

**TRAINING TAX**
**பயிற்சி வரி**

வேலைப் பயிற்சிக்கு நிதி வழங்கத் தொழிலாளர்

களுக்கு, வேலை தருவோருக்கு விதிக்கப்படும் வரி.

**வேறுபெயர்**

Training Levy

## TRAINING WITHIN INDUSTRY

**தொழிலகத்துட்பயிற்சி - தொஉப**

பணி மேற்பார்வை உத்திகளில் பயிற்சி பெறுவதற்கான குறிப்பிட்ட திட்டத்துக்குப் பொருத்தமான பெயர். இதில் விவாதம், செய்துகாட்டல், நடைமுறை நிகழாய்வுகள் ஆகிய முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கெனப் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களால் இது மேற்கொள்ளப்படுகிறது. இதில் கற்பிக்கப்படும் பாடங்களில், வேலை அறிவுறுத்தல், வேலை முறைகள், வேலை உறவுகள் மற்றும் வேலைப் பாதுகாப்பு ஆகியவை அடங்குகின்றன.

## TRANSFER OF TRAINING

**பயிற்சி இடமாற்றம்**

ஒரு மன / உந்து செயற்பாட்டைத் தொடர்புடைய இன்னொரு செயற்பாட்டைப் பயிற்றுவிப்பதன் மூலமாகப் பாதித்தல் - பெரும்பாலும் ஒரு சாதக விளைவுக்கே கையாளப்படுகிறது.

## TUTOR ORGANIZER

**பயிற்றுநர் - அமைப்பாளர்**

கல்வி அல்லது சமூக - பண்பாட்டு நடவடிக்கை நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கும் - நிருவகிக்கும் அத்துடன் வயது வந்தோருக்குக் கற்பிக்கும் ஒருவர்.

---

# U

---

## UNIVERSITY DEPARTMENT OF ADULT EDUCATION

**வயதுவந்தோர் கல்விக்கான பல்கலைக் கழகத் துறை**

*காண்க:*

University Extension Service

வயதுவந்தோர் கல்வியை ஆய்வதையும் வயது வந்தோருக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதையும் நோக்க

மாக உடைய பல்கலைக் கழகத் துறை.

**UNIVERSITY EXTENSION**

**பல்கலைக்கழக விரிவாக்கம்**

ஒரு பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் முதலான ஆதாரங்கள் – ஊடகத்துள் வைத்தோ வெளியிலோ முறையான மாணவர் குழாத்துக்கு உரிய பகுதிக்கு வெளியே பல்கலைக்கழகம் வழங்கும் பகுதியில் வசிக்கும் வயதுவந்தோருக்கு வழங்கப்படும் நடவடிக்கைகள். இதில் விருதுக்குரிய அல்லது பயன்கருதிப் போதனை, அறிவுறுத்தல், ஆலோசனை, தேவைகள் முதலான பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளும் அடங்கலாம்.

**வேறுபெயர்**

University Extramural Education

**UNIVERSITY EXTENSION DEPARTMENT**

**பல்கலைக்கழக விரிவாக்கத்துறை**

காண்க:

University Extension Service

**UNIVERSITY EXTENSION SERVICE**

**பல்கலைக்கழக விரிவாக்க சேவை**

பல்கலைக்கழகத்திற்குள் இருக்கும் நிருவாக மற்றும் கற்பிக்கும் அமைப்பு. முழுநேரப் பதிவு செய்துள்ள மாணவர் குழா முக்கு வெளியிலுள்ள வயது வந்தோருக்குப் பல்கலைக் கழகக் கல்வி கிடைப்பதற்குப் பொறுப் புடையது.

**UNIVERSITY EXTRAMURAL DEPARTMENT**

**பல்கலைக்கழகத்திற்கு வெளியில் கல்விப் பணியினை மேற்கொள்ளும் பல்கலைக்கழகத் துறை**

காண்க:

University Extension Service

**UNIVERSITY EXTRAMURAL EDUCATION**

**பல்கலைக்கழகத்திற்கு வெளியில் பல்கலைக் கழகத்தால் அளிக்கப்படும் கல்வி**

ஐக்கிய அமெரிக்காவில் புழங்குவதில்லை.

காண்க: University Extension

**UNIVERSITY WITHOUT WALLS**

**சுற்றுச் சுவரற்ற பல்கலைக்கழகம்**

காண்க:
Open University

**UPDATING TRAINING**

**பயிற்சியைப் புதுக்கல்**

ஐக்கிய இங்கிலாந்தின் சொல். ஒருவரின் தொழிற் பான்மைகள், அறிவு மற்றும் திறன் பாணிகளை, அத்துறை களில் நிகழ்ந்துள்ள சமகால வளர்ச்சிக்கு இணையாகக் கொணர உருவாக்கிய பயிற்சியைக் குறிக்கிறது.

**URBAN EXTENSION**

**நகர விரிவாக்கம்**

நகரச் சூழ்நிலைகளில் மேற் கொள்ளப்படும் விரிவாக்கக் கல்வி.

**USUARIO**

**நேயர்**

ஊடகங்கள் வழி வழங்கப் படும் கல்வி நிகழ்ச்சிகளில் பதிந்து கொள்பவரை அல்லது அவற்றைப் பயன்படுத்து பவரைக் குறிக்கும் ஸ்பானியச் சொல்.

---

## V

---

**VILLAGE COLLEGE**

**ஊரகக் கல்லூரி**

ஊரகப் பகுதியில் இருக் கும் சமுதாயக் கல்லூரியைக் குறிப்பிட ஐக்கிய இங்கிலாந் தில் வழங்கும் சொல்.

**VOCATIONAL EDUCATION**

**தொழில்சார் கல்வி**

காண்க: Vocational Training

### VOCATIONAL TRAINING
**தொழில்சார் பயிற்சி**

ஒரு வேலைப் பொறுப்பை / பொறுப்புகளை நிறைவேற்ற ஒருவருக்குத் தேவைப்படும் பான்மைகள், அறிவு மற்றும் திறன் பாணியின் முறையான வளர்ச்சி.

**வேறு பெயர்கள்**

Vocational Education
Vocational Training
Occupational Training

### VOCATIONAL TRAINING CENTRE
**தொழில்சார் பயிற்சி மையம்**

தொடக்கக் கல்விச் சுற்றை முடித்தபின் ஏற்கனவே சிறிது காலம் வேலை செய்து வாழ்வோருக்குத் தொழில்சார் பயிற்சி வழங்கும் நிறுவனம். வழக்கமாகப் பயிற்சி திறன் மிகு ஊழியர் என்ற மட்டத்திலேயே வழங்கப்படுகிறது.

### VOLUNTARY AGENCY
**தன்னார்வ முகமை**

காண்க: Voluntary Association

### VOLUNTARY ASSOCIATION
**தன்னார்வக் கழகம்**

உறுப்பினர்களாலேயே கட்டுப்படுத்தப்படும் ஆதாயம் நாடாத் தனியார் அமைப்பு. அமைப்பின் நோக்கங்களை முன்னெடுக்க இவர்கள் ஊதியமின்றித் தம் சேவைகளை வழங்குகிறார்கள். அமைப்பின் நோக்கங்கள் கல்வி சார்ந்ததாக அல்லது சமூக – பண்பாட்டுத் தன்மையதாக உள்ளன. ஊதியம் வழங்கப்படும் ஊழியர்களையும் ஒரு தன்னார்வ அமைப்பு கொண்டிருக்கலாம்.

**வேறுபெயர்**

Voluntary Agency
Voluntary Body

### VOLUNTARY BODY
**தன்னார்வ அமைப்பு**

காண்க: Voluntary Association

# W

## WARDEN
**காவலர், தலைவர்**

கல்வி அல்லது சமூக - பண்பாட்டு நடவடிக்கைகளுக் கான நிறுவனத்தின் இயக்கு நருக்குச் சிலபோது தரப்படும் விருது. எ.கா: வயதுவந்தோர் கல்வி மையத்தின் தலைவர்; தங்கிப்பயிலும் கல்லூரிக் காவலர்.

## WEAKEND COURSE
**வாரக்கடைசிப் படிப்பு**

வாரக்கடைசியில் வழக்க மாகச் சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்களிலும் ஒரு குழுவாகச் செயற்பட மாணவர் களைக் கொணரும் படிப்பு. படிப்பு வெள்ளிக்கிழமையே தொடங்கி விடலாம். இது தங்கிப் படிப்பதாகவும் இருக்க லாம், அல்லாமலும் இருக்க லாம். இந்த வாரக் கடைசிப் பள்ளியின் சிறப்பு என்னவென் றால் இயல்பான வார வேலை நாள்களில் ஏற்படும் குறுக்கீடு கள் இல்லாமல் தொடர்ச்சி யாகக் குறுகிய கால அளவில் மும்முரமாகப் படிக்கும் வாய்ப்பை இது வழங்குவ தாகும்.

## WOMEN'S EDUCATION
**பெண்கல்வி**

உழைப்புச் சந்தையில் நுழையும் – குறிப்பிட்ட காலம் வீட்டில் இருந்து திரும்பவும் நுழையும் தம்முன் திறந்துள்ள வாழ்க்கைத் தெரிவுகளின் வீச்சை விரிவுபடுத்த விழை யும் அல்லது தம் தனிப்பட்ட மற்றும் சமூக அனுபவத்தை வளப்படுத்த விரும்பும் பெண் களுக்காகத் திட்டமிட்ட கல்வி நடவடிக்கைகள். பொது மற் றும் தொழில்சார் படிப்பு களுடன், தன்னைப் பற்றிய கருத்து, பாத்திரம் மாறுதல், தொழில்சார் தெரிவுகள் தொடர்பான அறிவுறுத்தல் களுக்கு முதலிடம் தரப்படு கிறது. பெண்களின் சிறப்பான தேவைகளுக்குப் பொருந்திய முறைகள் கையாளப்படு கின்றன.

### WOMEN'S STUDIES
**பெண்ணியல் ஆய்வுகள்**

ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது சமூகக் குழுக்களின் சமூக – பண்பாட்டு – அரசியல் மற்றும் அறிவுலக வளர்ச்சியில் வரலாறு நெடுகவும், பெண் களின் சூழ்நிலை மற்றும் பெண்களின் பங்கின் இயல்பு குறித்து ஈடுபடும் ஆய்வுத் திட்டங்கள்.

### WORK-STUDY PROGRAMME
**வேலை - படிப்புத் திட்டம்**

ஐக்கிய அமெரிக்கச் சொல்

காண்க: Sandwich Course

### WORKER'S EDUCATION
**தொழிலாளர் கல்வி**

தம்மிடம் எதிர்பார்க்கப் படும் சமூகப் பாத்திரங்களை – குறிப்பாகத் தொழிற்சங்கப் பணிகளைத் திறம்பட நிறை வேற்றத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த வயது வந்தோரைத் தகுதியான வர்கள் ஆக்கும் அறிவு - பான்மைகள் – திறன்களை முறையாக வளர்க்கும் கல்வி.

### WORKSHOP
**பட்டறை**

நேரடி அறிவு பெறவும் நடைமுறை வேலையை மேற் கொள்ளவும் வேண்டி வல்லு நர்களைச் சந்திப்பதில் பொது வான ஆர்வமோ சிக்கலோ உடையவர்களுக்கு வாய்ப்பு கள் வழங்கும் கூட்டம்.

## Y

### YOUNG WORKER'S HOSTEL
**இளம் தொழிலாளர் விடுதி**

தொழில்துறைப் பகுதியில் வேலை வாழ்வைத் தொடங் கும் இளம் ஆண்கள் / பெண் களுக்கான குடியிருப்பு மையத்துக்கான பிரெஞ்சுச் சொல். இங்கு பண்பாட்டு, பொழுதுபோக்கு நடவடிக்கை கள் மேற்கொள்ளப் படுகின் றன. இவற்றில் இப்பகுதியில் வசிக்காதோரும் பங்கேற்க லாம்.

**YOUTH AND CULTURAL CENTRE**

**இளையோர் பண்பாட்டு மையம்**

ஒரு சுற்றுப்புறம், நகரம் அல்லது கிராமத்தின் இளையோருக்கு *(15 – 30* வயதினர்*)* இடமளிக்கும் நிறுவனத்தைக் குறிக்கும் பிரெஞ்சுச் சொல். இம்மையம் பலவிதமான ஓய்வு நேர மற்றும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளை வழங்குகிறது.

*Reference*

**Terminology of Adult Education** An abridged version of UNESCO Publication, Published by Directorate of Adult Education, Ministry of HRD, Dept. of Education, Govt. of India, New Delhi-11.